www.padippakam.com


# மார்க்சிஸ்ட்

தத்துவார்த்த மாத இதழ்

மார்ச் 2012

தொகுப்பு - 17 இதழ் - 5



ஆசிரியர்

**வே. மீனாட்சிசுந்தரம்**

ஆசிரியர் குழு

**ஜி. ராமகிருஷ்ணன்**
**ஏ.கே. பத்மநாபன்**
**என். குணசேகரன்**
**பாலு**
**ஆர். கோவிந்தராஜன்**
**என். நன்மாறன்**
**ஆர். சந்திரா**
**கே. கனகராஜ்**
**எஸ். கண்ணன்**
**ஏ. பாக்கியம்**
**கே. சுவாமிநாதன்**



கட்டுரைகள், கடிதங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்

மார்க்சிஸ்ட் மாத இதழ்
27, வைத்தியராம் தெரு,
தி.நகர், சென்னை - 600 017.
போன்: 24341205, 2432600

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி
மேலாளர்
மார்க்சிஸ்ட் மாத இதழ்
6/16, புறவழிச் சாலை, மதுரை – 625 018.
E-Mail: cpimtn@sify.com
cpimtn2009@gmail.com



**சந்தா விபரம்**

தனிப்பிரதி ரூ. 5/–
6 மாத சந்தா ரூ. 30/–
ஆண்டு சந்தா ரூ. 55/–
5 பிரதிகளுக்கு மேல் ஏஜன்சி வழங்கப்படும்
25 சத கமிஷன் உண்டு.

Registered with the Registrar of Newspaper for India under Registration No. TNTAM/2000/2593

வெளியிடுபவர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில்
என். வரதராஜன்

அச்சிடுபவர்:
வைகை பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
மதுரை - 625 018


## இந்த இதழில்



,இந்த இதழில்====

முதலாளித்துவ உற்பத்தியின் இயங்கு சக்தியாக இருக்கும் லாபம் தேடல், வட்டிதேடல் இவைகளுக்கு உகந்ததாக பண அமைப்பின் சர்வதேச உறவை சந்தை வழியில் ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கிவிட்டதாக உவகை கொண்டனர். ஆனால் அது எப்படி நெருக்கடியை கொண்டு வந்தது என்பதை அவர்களால் உணரமுடிய வில்லை. இந்த பண அமைப்பை பாதுகாக்க மூளையை கசக்குகின்றனர். புகை மூட்டத்தில் மாட்டிக்கொண்ட பெருச்சாளிபோல் திணறுகின்றனர். பணப் பெருக்கத் திற்காக பெருளாதாரம் என்ற நிலை மாறி மக்களின் சுகத்திற்காக பொருள் உற்பத்தி என்ற உணர்வு மக்களை ஈர்க்காமல் பூமிக்கும், அதில் வாழும் மக்களுக்கும் விமோசனம் இல்லை என்பதை எளிய முறையில் திருப்புமுனையில் உலகம் என்ற கட்டுறை விளக்குகிறது.

இந்திய அரசியலில் ஊழல் அரசியல்வாதிகளுக்கு காந்தியிசம் ஒரு கேடயமாக இருப்பதை இன்று யாரும் மறுக்கமாட்டார்கள்.மைனாரிட்டி அரசை உருவாக் கவும், ஐந்தாண்டு ஓட்டவும் தேவையான நாடாளுமன்ற தில்லுமுல்லுகளுக்கு காந்தியிசம் எப்படி கைகொடுக் கிறது என்பது பலருக்கு புரியாத புதிராகும். பல ஆண்டு களுக்கு முன்னரே இ.எம். எஸ் இந்த புதிரை விடுவித்து விடுகிறார். சாமிநாதன் கேள்வி பதில் மூலம் அதனை எடுத்து வைக்கிறார் .இதற்கு ஏ.கே. ஜி சுயசரிதையின் ஒரு பகுதி நமக்கு வரலாற்று ஆதாரமாக இருக்கிறது. ஏ.கே.ஜியின் வாழ்வில் காந்தியிசம் என்ற தலைப்பில் அது வருகிறது.

உழைக்காமல் வாழும் மேட்டுக்குடி கலாசாரம் பாட்டாளிவர்க்கத்தையும், இதர உழைப்பாளி மக்க ளையும் தொத்து நோயாக பற்றிக்கொள்வதை சமூக இயலாளர்கள் சுட்டிக்காட்டுவதை நாம் அறிவோம். இனம் காண இயலாத இயற்கை மற்றும் சமூக காரணங் களால் தற்காப்பு நிலைக்கு மக்கள் தள்ளப்படும் பொழுது பயம், மந்தை உணர்வு ஒன்றை அடையாளமாகவைத்து திரளும் கூட்டுணர்வு, ஹீரோ ஓர்ஷிப் இவைகள் ஏற்படு வதையும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுவதை காண்கி றோம். வேலை பறிபோகும் என்ற நிலையை உருவாக்கு வதின் மூலம் அத்தகைய உணர்வை உழைப்பாளி மக்களி டையே நவீன பூர்சுவாக்கள் ஏற்படுத்துகின்றனர். இதன் விளைவாக புரட்சிகர கருத்துக்களுக்கு பள்ளியாக இருக்க வேண்டிய தொழிற்சங்க இயக்கம் எப்படி சென்னையில் திசைமாறிவிட்டது என்பதை விளக்குகிற புதிய ஜீவாவின் படைப்பை மன்னார் அறிமுகப்படுத்துகிறார். இந்த படைப்பை படித்த பிறகு நமக்கு ஏற்படும் உணர்வு ஒருவனுக்கு “சென்ற இடமெல்லாம் தீது ஓரியி நன்றின் பால் உய்க்கும் அறிவும்,தத்துவ கண்ணோட்டமும் அவசியம். அதன் பெயர் மார்க்சிசம்.

படிப்பகம்

www.padippakam.com

# திருப்புமுனையில் உலகம் உலகமயமாக்கலின் நெருக்கடி (3)

□ பாலு □

முதலாளித்துவ அமைப்பில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி அதன் இயல்பிலிருந்து பிறழ்ந்து ஏற்பட்டதல்ல. இந்நெருக்கடி முதலாளித்துவ பொருளாதார மற்றும் சமூக அமைப்பின் இயல்பிலிருந்தே தோன்றியதாகும். முதலாளித்துவ பொருளாதாரத்தில் கிராக்கி என்பது ஒரு தொடர் பிரச்சினையாகும். பேராசிரியர் பிரபாத் பட்னாயக் சுட்டிக்காட்டியபடி, முதலாளித்துவம் என்பது இயல்பிலேயே கிராக்கியின் தொய்வால் கட்டுண்ட அமைப்பாகும். இதனால் மிக விரைவாக வளரும் உற்பத்தி சக்திக்கும், மந்தமாக வளரும் நுகர்வு சக்திக்கும் இடையே எப்போதும் ஒரு இழுபறி இருந்து கொண்டே இருக்கின்றது. விளம்பரங்கள் மூலம் நுகர்வுத் தன்மையை வளர்க்க முயற்சித்த போதும், எதுவும் நெருக்கடியை இல்லாமல் செய்யும் அளவிற்கு பலனளிப்பதில்லை. நுகர்வு சக்தியை வளர்க்க இந்த நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. எனவே முதலாளித்துவ அமைப்பு அடிக்கடி நெருக்கடியில் சிக்கிக் கொள்கிறது.

ஆக, முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்கே மாறி மாறி பெருக்கமும் மந்தமும் உள்ள வணிகச் சுழற்சிகள் கொண்டதாகவே இருக்கும்.

### உலகமயமாக்கலின் நடப்பு நெருக்கடிகள்:

தற்போதைய உலகளாவிய முதலாளித்துவம் எதிர்கொண்டுள்ள நடப்பு நெருக்கடிக்கென்று பிரத்தியேகமான அம்சங்கள் உள்ளன. எனவேதான் இக்கட்டுரையில் ஒருமையில் குறிப்பிடாமல் பன்மையில் அவற்றை உலகமயமாக்கலின் நெருக்கடிகள் என்று குறிப்பிட்டுள்ளோம். இத்துடன் உலக தட்பவெப்ப நிலை நெருக்கடியும் உருவாகியுள்ளது. இந்நெருக்கடி, இயற்கைச் செல்வாதாரங்களை நேர்மையான, ஒழுங்குமுறையுடன் பயன்படுத்தும் வழிமுறைகள் இல்லாத, தனியார் லாபத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு இயங்கும் பொருளாதார அமைப்பின் விளைவாகவே உருவாகியுள்ளது. உலக ஊக நிதி மூலதனம், உலகச் சந்தைப் பொருட்களின் வியாபாரத்தில் இஷ்டம் போல் விளையாடுகின்றன. இப்போக்கு, நவீன தாராளமயக் கொள்கைகளுடன் இணைந்து செயலாற்றும் போது, மோசமான விளைவுகளை உருவாக்கியுள்ளன. இதன் காரணமாக உணவு நெருக்கடியும் உருவாகியுள்ளது. லாப நோக்கால் மட்டுமே உந்தப்பட்டு இயங்கும் முதலாளித்துவ அமைப்பு இன்னும் எப்படிப்பட்ட நெருக்கடிகளையெல்லாம் உருவாக்கும் என்பதை நாம் அனுமானிக்க முடியாத நிலையில் உள்ளோம். நீண்ட கால அடிப்படையில் மனித குலமே தப்பிப் பிழைப்பதும், மனித நாகரிகம் தொடர்வதும் நிச்சயமற்ற நிலைக்கு தள்ளப்பட்டு கேள்விக்குறியாகி உள்ளது. இதில் நன்கு கண்ணுக்குப் புலப்படுவது,மிக அதிகமாக ஊடகங்களால் வெளிச்சம் போட்டுக் காட்டப்படும் உலகப் பொருளாதார மந்த நிலைமையே. சமீப வாரங்களிலும், மாதங்களிலும் யூரொஜோன் எனப்படும் ஐரோப்பிய நிகழ்வுகள் மீது அதிகமாக கவனம் செலுத்தப்படுகின்றது.

இந்நெருக்கடிக்குக் காரணங்களாக கிரீஸ், ஸ்பெயின், இத்தாலி, அயர்லாந்து, போர்ச்சுக்கல் போன்ற நாடுகளின் அரசுகளும் மக்களும் ஊதாரித்தனமான மற்றும் வரவுக்கு மீறிய செலவினங்களை மேற்கொண்டதுதான் என்ற பிரச்சாரம் நடத்தப்படுகின்றது. ஆனால் உண்மையில் இந்நாடுகளின் அரசுகள் வாங்கிய கடன்கள் நெருக்கடிக்குக் காரணம் இல்லை; மாறாக இந்நிலைமைக்குப் பொறுப்பேற்க வேண்டியது இந்நாடுகளின் மீது உலக அளவில் செயல்படும் ஊகவணிகம் தொடுக்கும் தாக்குதல்களேயாகும். இந்த ஊக வணிக அசுரனின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அந்தந்த நாட்டின் அரசுகளால் எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் முறியடிக்கப்படுகின்றன. மேலும் நவீன தாராளமயம் தத்துவார்த்த ரீதியாகவும், கொள்கை ரீதியாகவும் உலக அளவில் ஆதிக்கம் செலுத்தும் நிலையும் உள்ளது. எனவே இன்றைய நிலைமையில் நிதி மூலதனம் உலக அளவில் செயல்படுகிறது; உலகின் எந்த அரசின்கட்டுப்பாடுகளுக்கும் அது அடங்க மறுக்கின்றது; இஷ்டம் போல் தங்கு தடையின்றி எல்லைகளைத் தாண்டி நாடு விட்டு நாடு போகும் இயல்புடையதாக உள்ளது. இதனால் பலம்



படிப்பகம்

www.padippakam.com

பொருந்திய பெரிய நாடுகளின் அரசுகள் உள்பட அனைத்து நாட்டு அரசுகளும் ஊக வணிகச் செயல்பாடுகளை கட்டுப்படுத்த இயலாமல் செயலிழந்த நிலைமையில் உள்ளன. நிதி ஊக வணிகம் ஒவ்வொரு நாட்டிலும் உருவாக்கும் நெருக்கடிகளுக்கு பதிலடி கொடுக்க முடியாமல் அந்நாட்டு அரசுகள் திணறுகின்றன.

2008 நிதி நெருக்கடிக்குப் பின் நிதி மூலதனம் உலக அளவில் ஓரளவுக்கு அடக்கி வைக்கப் பட்டது; ஆனால், ஊக வணிக சக்திகள் தங்கள் பலம் அனைத்தையும் திரட்டி மீண்டும் ஒன்று கூடி செயல்படுகின்றன. எந்த ஒரு நாட்டின் அரசு விதிக்கும் கட்டுப்பாட்டையும் நிதி மூலதனம் மதிப்பதில்லை; ஐ.எம்.எஃப் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாடுகளும் நிதி மூல தனத்தை கட்டுப்படுத்துவதில்லை. இவ்வாறு எதற்கும் கட்டுப்படாமல் நாடுகளை நாசமாக்கி சூதாடி லாபம் ஈட்டும் வகையில் இயங்குவதில் நிதி மூலதனம் வெற்றி பெற்றுள்ளது. நவீன தாரள மயம் என்ற தத்துவம் நவீன செவ்வியல் பாரம் பரியத்தைச் சாராத பொருளாதார வல்லுனர்க ளால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட தத்துவ மாகும். ஏன்?, 2008 நெருக்கடியின் போது அது அதிகாரப்பூர்வமாகவே கைவிடப்பட்ட கொள் கையாகும். இருந்த போதிலும் உலகின் முத லாளித்துவ அரசுகளின் கொள்கைகளை தீர் மானிக்கும் சக்தியாக அது தொடர்கிறது. நிதி மூலதனம் இவ்வாறு செயல்படுவது வெறும் தத்துவ பலத்தினால் மட்டுமல்ல. அதனிடம் உள்ள செல்வக்குவிப்பு அதற்கு அரசியலில் மிகுந்த செல்வாக்கு அளிக்கிறது.

ஐரோப்பிய, அமெரிக்க நாட்டு அரசுகள் தங்கள் நாடுகளில் ஏற்பட்டுள்ள தீவிரமான பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண முடிய வில்லை. ஜப்பான் நாட்டிலும் பொருளாதாரத் தேக்கநிலை தொடர்ந்த வண்ணமாகவே உள்ளது. இந்நிலை யில் எழுந்து வரும் பொருளா தாரங்கள் என்று போலியான கரிசனத்துடன் அழைக்கப்படும் சீனா, இந்தியா, பிரேஸில், தென்ஆப்பிரிக்கா நாடுகளின் பொருளா தாரங்கள், தேங்கிக்கிடக்கும் பெரும் பொருளா தாரங்களைத் தூக்கி நிறுத்த உதவும் என்ற வாதம் நம்ப முடியாத வாதமாகும். ஏனெனில் இந்நாட்டு பொருளாதாரங்கள் அளவில் சிறியவை மட்டு மல்ல; அவைகள் பணக்கார நாடுகளுக்கு செய்யும் ஏற்றுமதிகளையே நம்பி உள்ளன. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஊக வணிக சக்திகள் இந்நாடுகளின் சுயேச்சையான நிதிப் பெருக்கத்தை அனுமதிக்காது. அனைத்து நாடு களும் ஒருங்கிணைந்து ஊக வணிகத்துக்கும் நிதி மூலதனத்திற்கும் எதிராக செயல்படும் நிலைமை களும் இல்லை. எனவே உலக அளவிலான பொருளாதாரப் பெருக்கம் என்பது நடக்காத காரியமாகவே உள்ளது. நிதி மூலதன உலகமய மாக்கலின் ஆதிக்கம் எங்கும் தொடர்கிறது.

## எழுச்சிமிக்க மக்கள் இயக்கங்கள்:

இதுவரை நம் முன் நடந்து கொண்டிருக்கும் உலகமயமாக்கலின் எதிர்மறை அம்சங்களைப் பற்றி விவாதித்தோம். அதே சமயத்தில் நம் முன் நடக்கும் சாதகமான அம்சங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.. உலகப் பொருளாதார நெருக்கடி உருவானதிலிருந்தே சாதாரண மக் களின் சீற்றம் அதிகரித்துக் கொண்டே வந்துள் ளது. குறிப்பாக இது வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் நிதிமூலதனக் கும்பலை நோக்கியும், அவர்களுக்கு சலுகைகளை வழங்கி ஆதரிக்கும் அந்நாட்டு அரசுகள் மீதும் பாயத் துவங்கியுள் ளது. மக்களின் எதிர்ப்புகள் பல்வேறு வடிவங் களை எடுத்துள்ளது. கடந்த சில மாதங்களில் பிரம்மாண்டமான இயக்கம் தோன்றியுள்ளது. அதுதான் கைப்பற்றுவோம் இயக்கம் முதலில் செப்டம்பர் 17 அன்று உலக நிதி மூலதனத்தின் தலைமையகமான, நியூயார்க் நகரத்தின், வால் ஸ்ட்ரீட்ஐ எதிர்ப்பாளர்கள் கைப்பற்றி முகாமிடத் துவங்கினர். அவர்கள் போராட்டத்தின் முக்கிய இலக்கு, 2008ல் நிதி நெருக்கடி உருவாவதற்கு காரணமான முதலீட்டு வங்கிகளும், மற்ற நிதி நிறுவனங்களும்தான். தாறுமாறான சந்தைச் செயல்பாடுகளையும், ஊக நிதிச் சூதாட்டங் களையும் கையாண்ட இந்நிறுவனங்களை, நெருக் கடிக்குப் பொறுப்பாக்கி அவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்ப்பாளர்கள் கோரிக்கை எழுப்பியுள் ளனர். மூழ்கிக் கொண்டிருக்கும் இந்நிறுவனங் களைக் காப்பாற்றும் வகையில் எந்த பண உத வியும் அரசுகள் மேற்கொள்ளக்கூடாது என்ற கோரிக்கையையும் எதிர்ப்பாளர்கள் எழுப்பியுள் ளனர். இந்த இயக்கம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவியுள்ளது என்பது மட்டுமல்ல; உள்ளடக்கத் திலும், கோரிக்கைகளின் தன்மையிலும் கூட பெரும் வீச்சை இந்த இயக்கம் அடைந்துள்ளது. வால் ஸ்ட்ரீட் டைக் கைப்பற்றுவோம் என்பதி லிருந்து ஒரு பரந்த அளவிலான கைப்பற்றும் இயக்கமாக மாறியுள்ளது. அமெரிக்க நாட்டின் மற்ற நகரங்களுக்கும், மற்ற பணக்கார நாடு களுக்கும் அது பரவியுள்ளது. நிதி மூலதனத்தி னால் பெரும் லாபங்களை தமது சொந்த வாழ் வில் ஈட்டியுள்ள நியூயார்க் நகர மேயர் ப்ளூம் பெர்க் இரவோடு இரவாக பலவந்தமாக எதிர்ப் பாளார்களை வெளியேற்ற முயன்றார். ஆனால் இந்நடவடிக்கை எதிர்ப்பாளர்களின் மன உறு திக்கு மேலும் வலுவையே ஊட்டியது. அத்துடன்



படிப்பகம்

www.padippakam.com

இயக்கம் விரைவாக பல நகரங்களுக்கும் பரவ உதவிற்று.

இந்த இயக்கத்தால் சமூகத்தின் பல தரப்பட்ட பகுதி மக்களையும் தன்பால் ஈர்க்க முடிந் துள்ளது.. கல்விக் கடன்களின் தவணைகளைக் கட்ட முடியாத மாணவர்கள், வீட்டுக் கடன் களைக் கட்ட முடியாது தவிக்கும் மக்கள், பொரு ளாதார நெருக்கடியால் வேலையிழந்தோர், சமூக பாதுகாப்புச் செலவினங்களை அரசு வெட்டிய தால் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் என்று பல தரப்பினரும் இயக்கத்தில் பங்கேற்றனர்.

நாட்டின் பொருளாதார அமைப்பின் காரண மாக மக்கள் வேலைகளை இழந்துள்ளனர். தாங்க முடியாத கடன் சுமை ஏற்றப்பட்டுள்ளது. விரும் பிய கல்வியைத் தொடர முடியாத நிலையும் ஏற் பட்டுள்ளது, மக்களின் கோபம் தங்களுக்கு ஏற் பட்டுள்ள நிலைமைகளின் மீது மட்டுமல்ல; அது வேறு பக்கமும் பாய்ந்துள்ளது. நாட்டில் ஏற் பட்டுள்ள பொருளாதார, நிதி நெருக்கடிக்கு முதற்கண் காரணமாக இருந்தவர்கள் வங்கிகளும் ஊக நிதி வணிகம் செய்பவர்களுமே. இவர்களை காப்பாற்றுவதற்கும் கைதூக்கி விடுவதற்கும் ஏதுவாக அரசு பண உதவிகளை வாரி வழங்கு கின்றது. பெரும் பணக்காரர்களுக்கு வரிச் சலுகை களை வழங்குகின்றது. அதே சமயம் பட்ஜெடில் துண்டு விழக்கூடாது என்ற நிலைபாட்டை எடுத்துக் கொண்டு பட்ஜெட்டில் விழும் துண் டைக் குறைப்பதற்காக சமூகப் பாதுகாப்பு செல வினங்களை அரசு குறைத்துக்கொண்டது. வேலையின்மை விகிதம் யாரலும் ஏற்றுக் கொள்ளமுடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. எனவே மக்களின் கோபம் அரசின் நடவடிக் கைகள் மீதும் சூழ்நிலைமைகள் மீதும் திரும்பி யுள்ளது. கைப்பற்றும் இயக்கங்கள், மிகச் சிறந்த கோஷம் ஒன்றை உருவாக்கி, நவீன தாராளமய பொருளாதார அமைப்பின் காரணமாக உரு வாகியுள்ள ஏற்றத்தாழ்வுகளையும், அநீதிகளை யும் சாடுகின்றன.. இந்தப் பொருளாதார அமைப்பு, பச்சையாக, ஜனநாயகமற்ற அமைப் பாக இயங்குவதையும் சுட்டிக்காட்டுகின்றன.

அந்தக் கோஷம், நாங்கள் 99 சதவீதத்தினர் என்பதுதான்.. இக்கோஷம் நவீன தாராளமய அமைப்பு என்பது, , பண முதலைகளுக்கு சாதக மான முதலாளித்துவ அமைப்பு என்பதையும், சாதாரண மக்களுக்கு எதிரானது என்பதையும், சமத்துவமற்ற, அநீதியான அமைப்பு என்பதை யும் தெளிவாக்குகின்றது. 99 சதவீதமாக உள்ள பெரும்பான்மை மக்களின் கோரிக்கைகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் அரசின் தன் மையை வெளிச்சம் போட்டு காட்டும் வகையில் இக்கோஷம் உள்ளது. நாட்டின் பொருளாதார

**முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த போக்கே மாறி மாறி பெருக்கமும் மந்தமும் உள்ள வணிகச் சுழற்சிகள் கொண்டதாகவே இருக்கும்.**

அமைப்பு சமூகத்தில் மிகச் சிறுபான்மையாக உள்ள செல்வம் நிறைந்த மக்களின் நலன் களுக்கே சேவை செய்கிறது என்பதையும், சாதாரண உழைக்கும் மக்களையோ, நடுத்தர வர்க்கத்தையோ கண்டு கொள்வதில்லை என் பதையும் பளிச்சென்று புரியும் வகையில் எடுத்துச் சொல்கிறது. கைப்பற்றும் இயக்கங்களில் பல பலவீனங்களும் இல்லாமலில்லை. ஒருங் கிணைந்த திட்டம் ஏதும் இல்லாமலேயே இயக்கம் உள்ளதை பார்வையாளர்கள் ஆதர வாளர்கள் உட்பட- அனைவரும்-சுட்டிக் காட்டி யுள்ளனர். இயக்கத்திற்கு நாட்டின் (பொருளா தார, அரசியல்) அமைப்பு குறித்து தெளிவான புரிதல் இல்லை என்பதையும் கூறுகின்றனர். தற்போது ஆதிக்கம் செய்யும் பொருளாதார அமைப்பில் அரசு வகிக்கும் பங்கு குறித்தும், பல்வேறு சமூக வர்க்கங்கள் வகிக்கும் பங்கு குறித்தும் பொதுவான புரிதலை இந்த இயக் கங்கள் எட்ட வேண்டியுள்ளது.

பொதுவான கோரிக்கைப் பட்டியல்களை இயக்கம் உருவாக்கவில்லை. அதன் அடிப்படை யில்தான் இயக்கத்தின் எதிர்கால நடவடிக் கைகள் அமைய முடியும். கைப்பற்றுவோம் இயக்கம் உலக அளவில் ஏகாதி பத்தியம் ஆற்றும் கேந்திரமான பங்கினைப் புரிந்து கொள்ள வில்லை என்ற கருத்திலும் உண்மை உள்ளது. இவ்வாறு பலரால் பலவித மான பலவீனங்கள் கொண்டதாக கருதப் பட்டாலும், இந்த இயக்கம் பல புதுமையான வழிமுறைகளையும் பாதை களையும் கண்டுள்ளது. போலீஸ் அடக்குமுறை களை எதிர்த்து நின்று கடுமையான குளிர் காலத்திலும் போராட்டங்கள் தொடர வழி வகைகள் செய்துள்ளது. மேற்கூறிய பலவீனங் களை களைந்தெறிந்து இயக்கம் மேலும் முன் னேறிச் செல்லும் என்று நம்புவதற்கு இடம் உள்ளது. எப்படியிருப்பினும் இந்த இயக்கம் நவீன தாராளமயத்துக்கெதிராக போராடு பவர்களுக்கு மட்டுமல்லாமல், ஏகாதிபத்தி யத்தின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுபவர் களுக்கும், நிதி மூலதனத்தின் கொள்ளைகளை எதிர்த்துப் போராடுபவர்களுக்கும் உந்துசக்தி தரும் ஊற்றுக்கண்ணாக உள்ளது. கைப்பற்று



படிப்பகம்

www.padippakam.com




வோம் இயக்கங்களின் வீச்சையும் அதன் வேக மான பரவலையும் ஒப்பிடும் போது, (இவ் வியக்கங்கள் மிக பரபரப்பாக இயங்கிய) மேற் கத்திய நாடுகள் உட்பட, எந்த நாட்டின் அச்சு ஊடகங்களும், தொலைக்காட்சி ஊடகங்ககளும் இவ்வியக்கங்களுக்கு தேவையான முக்கியத் துவத்தை அளிக்கவில்லை என்பதை நாம் காண முடிகிறது. ஆரம்பத்தில் இந்த இயக்கங்களை அவர்கள் கண்டுகொள்ளவில்லை; கேலி களையும்-வசைகளையும் வீசினர். மக்களின் ஆதரவு இவ்வியக்கங்களுக்குப் பெருகுவதைக் கண்ட பின்னர்தான் தங்கள் போக்கை சற்று மாற்றிக் கொண்டனர். இந்திய ஊடகங்களிலும், பொதுவாக, ஒரு சில விதிவிலக்குகள் தவிர, மிகக் குறைந்த அளவிலேயே இவ்வியக் கங்களைப் பற்றிய செய்திகளுக்கு இடம் தந்தனர். உள்நாட்டு, வெளிநாட்டு பெரு நிறுவனங்களிடம் இந்திய ஊடகங்கள் காட்டும் அடிமைப் புத்தியைக் காணும்போது, இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

கைப்பற்றுவோம் இயக்கங்கள் நடந்த அதே சமயத்தில் ஐரோப்பாவில் போராடும் உழைக்கும் வர்க்கமும் எழுச்சி பெற்றது. மாபெரும் போராட் டங்களை அது நடத்தியது. ஆனால் ஊடகங்கள் கைப்பற்றுவோம் இயக்கங்களுக்குக்கு தந்த நேரத்தை விட மிகக் குறைவான நேரத்தையும், முக்கியத்துவத்தையும் இப் போராட்டங்களுக்கு அளித்தன. எனினும் இப்போரட்டங்கள், திருப்பு முனையில் உள்ள, இன்றைய உலகச் சூழ்நிலை யில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

கிரேக்க அரசும் பன்னாட்டு மூலதனமும் இணைந்து கிரேக்க உழைக்கும் மக்கள் தலையில் பெரும் சுமைகளை சுமத்தும் முயற்சிகளை எதிர்த்து கடந்த இரண்டு வருடங்களாக, கிரேக்க உழைக்கும் வர்க்கம், போர்க்குணம் மிக்க கிரேக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் போராடி வருகின்றது. கிரேக்க நாட்டில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு கிரேக்க நாட்டுத் தொழிலாளிகள் எந்த விதத்திலும் பொறுப்பில்லை. சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் வீழ்ச்சிக்குப் பிறகு நவீன தாராளமயக் கொள்கைகளைப் பின்பற்றும் அரசுகள் மக்கள் நலத் திட்டங்களை அமல்படுத்த மறுக்கின்றன; ஓய்வூதியத் திட்டங்களை தனியார்மய மாக்குகின்றன; வேலை வாய்ப் பின்மைக்கு வழங்கப்படும் உதவித் தொகைகளை நிறுத்திவிட்டன; உழைக்கும் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைக ளின் மீது தாக்குதல்களைத் தொடுத்துள்ளன; இதனால் ஐரோப்பாவில் பல நாடுகளில் உழைக்கும் வர்க்கத்தின் போராட்டங்கள் அதி கரித்துள்ளன.

2008 பொருளாதார நெருக்கடிக்குப்பின், இத்தகைய போராட்டங்களின் வீச்சும் பரப்பும் இது வரை போராட்டக் களங்களை கண்டிராத உழைக்கும் மக்களையும் பெருமளவு சென்றடைந் துள்ளது என்பதே குறிப்பிடப்பட வேண்டிய அம்சம் ஆகும். குறிப்பாக சமீப மாதங்களில் நடந்த போராட்டங்களில் இது தெளிவாகப் புலப்பட்டது. ஃப்ரான்ஸ் நாட்டின் மாணவர்கள், உழைக்கும் வர்க்கத்தின் துணையுடன், முதல் பணியில் சேரும் எந்த தொழிலாளியையும் முதலாளிகள் விருப்பம்போல் வீட்டுக்கு அனுப்ப உரிமை தரும் சட்டத்தை எதிர்த்த போராட்ட மானாலும், கிட்டத்தட்ட அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் ஓய்வூதியப் பிரச்சினையின் பேரில் நடந்த போராட்டமானாலும்,

நிதி மூலதனம் மற்றும் ஐரோப்பாவின் பலம் மிகுந்த நாடுகளான ஜெர்மனி ஃப்ரான்ஸ் ஆகியவற்றின் நிர்பந்தத்துக்கு எந்த வித எதிர்ப்புமின்றி, அடிபணிந்து, கிரேக்க நாட்டு அரசு சிக்கன நடவடிக்கைகளை மக்கள் மீது திணிக்கும்போது அதை எதிர்த்து நிற்கும் கிரேக்க தொழிலாளி-பொதுமக்கள் கூட்டணியின் தீவிரமான போராட்டமானாலும்,

நவம்பர் 30, 2011,ல் பிரிட்டனில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பொதுத்துறை ஊழியர்களின் போராட்டமானாலும், ஒரே விஷயத்தைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

அது வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் உழைக்கும் வர்க்கம் போர்க்குணமிக்க காலகட்டத்தை எட்டியுள்ளது என்பதேயாகும்.



படிப்பகம்

www.padippakam.com




இப்போராட்டங்கள் இயல்பாகவே முற்போக்கு சக்திகளுக்கு வலு சேர்க்க உதவிடும் என்று உறுதி கூறி விட முடியாது. உண்மையில் உழைக்கும் வர்க்கத்துக்கு எதிரான ஒழுங்கு முறைகளைத் தூக்கிப் பிடிக்கும் ஒரு சில வலதுசாரி சக்திகள், இந் நிலைமைகளை பயன்படுத்திக்கொண்டு, அன்னியர் மீது வெறுப்பு, ஃபாசிசம் போன்றவற்றைத் தங்கள் நாட்டில் தூண்டிவிட முடியும். எனினும் இருபது வருடங்களாக தன்விருப்பப் படி புகுந்து விளையாடிக் கொண்டிருந்த நவீன தாராளமயத்தின் பெயர் மக்கள் மத்தியில் மிகவும் கெட்டுப் போயுள்ளது. எனவே இந்நாடுகளின் அரசியல் வர்க்க சக்திகளின் பலா பலங்களில் ஏற்படும் மாற்றம் முற்போக்கு சக்திகளுக்கு சாதகமான சூழலை உருவாக்கும் வாய்ப்பு நிச்சயமாக உள்ளது.

உலகின் மற்ற பகுதிகளிலும் முக்கியமான மாற்றங்கள் ஏறபட்டு வருகின்றன. மேற்கத்திய நாடுகள் மனிதாபிமான அடிப்படை என்ற போர்வையில் சுதந்திரமான நாடுகளின் மீது தொடுத்துவரும் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு தொடுக்கப்படும் தாக்குதல்களுக்கு அங்கீகாரம் வழங்க சில சமயம் ஐ.நா.வைத் துணைக்கு அழைத்துக் கொள்கின்றன; சில சமயம் எதற்கும் கவலைப்படாமல் நேரடியாக தாக்குதல்களைத் தொடுக்கின்றன. சோவியத் யூனியன் சீர்குலைந்ததும், அமெரிக்க நாட்டின் ஆதிக்கத்தில் ஒற்றைத் துருவ உலகம் உருவானதுமே இத்தகைய போக்குகளுக்கு மூல காரணங்களாகும்.

அதே நேரத்தில், உலகம் முழுவதும் ஜனநாயக உரிமைகளுக்காகவும், சிறப்பான வாழ்க்கைக்காகவும், மேம்பட்ட வாழ்நிலைமைகளுக்காகவும், மக்கள் இயக்கங்கள் அதிக அளவில் எழுச்சியுடன் நடப்பதையும் நாம் காண்கிறோம். முக்கியமாக, மேற்கத்திய நாடுகள் பொருளாதார தேக்க நிலையை அடைந்துள்ளன; அதே சமயம் இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் உலக அளவில் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

தற்போதைய உலக சூழ்நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும், இவற்றில் உள்ள சாத்தியங்களை புரிந்து கொள்வதற்கும் உதவக் கூடிய காரணிகளாக மேற்கூறியவை உள்ளன.

இவை அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்க்கும்போது உலகம் ஒரு திருப்பு முனையில் உள்ளது என்பதும், முதலாளித்துவ உலகமயமாக்கல் பலவிதமான உள் நெருக்கடிகளைக் கொண்ட கடுமையான, மாபெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளது என்பதும் தெளிவான விஷயமாகும்.

அறிவுஜீவிகளின் உலகத்தில் 1991க்கும் 2011க்கும் இடையே பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளிலும், நவீன தாராளவாதிகளின் எண்ணப்போக்கிலும் இவை ஏற்பட்டுள்ளன. 1991ல் வரலாறு முடிந்து விட்டது என்ற முழக்கத்தை வெற்றிக்களிப்புடன் ஒலித்தனர்; ஆனால் 2011ல், அவர்களிடையே, முதலாளித்துவத்தின் எதிர்காலம் குறித்து அவநம்பிக்கை உருவாகியுள்ளது. அது ஒரு பொருளாதார அமைப்பாக/அரசியல் அமைப்பாக தொடர்ந்து இயங்குவது குறித்து சந்தேகங்கள் தலை தூக்கியுள்ளன.

ரஷ்ய நாட்டு தேர்தல் முடிவுகளும் காற்று மாறி வீசுவதையே காட்டுகின்றன. ஜனநாயகத்தையும் சமூக முன்னேற்றத்தையும் முன்வைத்து போராடுவதற்கு, நடப்பு உலக நிலைமைகள் உருவாக்கித் தந்துள்ள வாய்ப்புகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது உலகின் முற்போக்கு சக்திகளின் கைகளிலேயே உள்ளது.

இந்தியச் சூழலில் இதன் பொருள்: ஊழல் மலிந்த, நவீன தாராளமய ஆட்சிகளுக்கு எதிராக இன்னும் பரந்த அளவில் உழைக்கும் மக்களை திரட்ட வேண்டும்.

மக்களை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட மாற்றுப் பொருளாதாரக் கொள்கைகளுக்காகப் போராட வேண்டும் என்பதே ஆகும். வாழ்நாள் முழுவதும் ஜனநாயகம், சமூக முன்னேற்றம் வேண்டி உழைக்கும் மக்களுக்கான போராட்டங்களுக்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்த தோழர் தாரகேஷ்வர் சக்ரவர்த்திக்கு நாம் செய்யும் தகுதியான அஞ்சலியாக இது அமையும். ■



படிப்பகம்

www.padippakam.com

# நினைவில் வாழும் தோழர் ஸ்டாலின்

□ ஆர். கோவிந்தராஜன் □

ஸ்டாலினிசம் என்ற வார்த்தை நீண்டகாலமாக கம்யூனிச எதிர்ப்பாளர்களால் தங்கள் வெறுப்பினை அள்ளிக்கொட்டப்பயன்படுத்திய வார்த்தை. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது காங்கிரசில் குருஷ்சேவ் தலைமயில் துவக்கப்பட்ட அவதூறு நாடகம் உலக வரலாற்றில் ஸ்டாலினின் பங்கை மறைத்தது மட்டுமல்லாமல், சோவியத் யூனியனின் சாதனைகளை வரலாற்று ஏடுகளிலிருந்து நீக்கிவிடும் முயற்சியாகவும் இருந்தது. ஹிட்லரோடு இணைத்து பேசப்பட்டு சர்வாதிகாரிகளின் பட்டியலில் ஸ்டாலினை வைப்பதை ஏகாதிபத்தியம அதன் கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்தின் பகுதியாக மாற்றியிருந்தது. இன்றும் அது தொடர்ந்தாலும், வரலாற்று ஆய்வாளர்கள் ஸ்டாலின் காலத்து நிகழ்வுகளையும் ஸ்டாலினையும் மறு ஆய்வுக்கு உட்படுத்தியிருப்பதாக பல்வேறு ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒருமுனையிலிருந்து மறுமுனைக்குத் தாவிச் சென்று 'எல்லாம் நன்றாகவே நடந்தது' என்று பதிவு செய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. 1956ல் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில் குறிப்பிட்டதை நினைவில் கொள்வது சரியாக இருக்கும். "இந்தப் பிரச்சனையின் முழுமையான தன்மையினை பரிசீலித்தால், 'ஸ்டாலினிசம்' என்று சிலர் குறிப்பிடுவதுகூட, முதலில் அது கம்யூனிசம் மற்றும் மார்க்சிசம்-லெனினிசம் என்று குறிப்பிடுவதாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும், அதுதான் பிரதானமான அம்சம். இரண்டாவதாகத்தான் அந்த வார்த்தை மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளை மீறி செய்யப்பட்ட தவறுகளைக் கண்டு சரி செய்ய வேண்டும் என்பதை குறிப்பிடுவதாக பொருள்கொள்ள வேண்டும். சரி செய்வதற்காக அந்த தவறுகளை வலியுறுத்திச் சொன்னாலும், அவைகளை சரியாகவும் மக்களை திசை திருப்புவதை தவிர்க்கும் முறையிலும் ஆய்வு செய்வதற்கு அதற்குரிய சூழலில் பொருத்திப்பார்ப்பது அவசியம் ஆகும். எங்களுடைய கருத்தின்படி, ஸ்டாலினின் தவறுகளை அவரின் சாதனைகளுக்குக் கீழேதான் வைக்க வேண்டும்.... இது கம்யூனிச அணிக்குள் எது சரி எது தவறு என்று முடிவு செய்ய வேண்டிய விஷயமே தவிர, வர்க்கப் போராட்டத்தில் நமக்கும் நமது எதிரிக்குமிடையே உள்ள பிரச்சனை அல்ல..". தவறை சரி செய்துகொண்டு வர்க்கப் போரை தொய்வின்றி நடத்த வேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

"சாகுந்தறுவாயிலுள்ள பூர்ஷ்வா மற்றும் அதன் பின் ஓடிக்கொண்டிருக்கும் குட்டி பூர்ஷ்வா நாய்களும் பன்றிகளும் சோவியத் அமைப்பு உருவாக்கத்தில் ஏற்படும் நமது பின்னடைவுகள், தவறுகள் மீது தங்களின் சாபத்தையும், பழித்தலையும், இகழ்ச்சியினையும் நம் தலைமீது குவிக்கட்டும். ஒரு வினாடி கூட நாம் தவறு செய்திருக்கிறோம் என்பதையோ பல தவறுகளை செய்துகொண்டிருக்கிறோம் என்பதையோ, பல பின்னடைவுகளால் இடர்படுகிறோம் என்பதையோ நாம் மறக்கவில்லை. உலக வரலாற்றில் இதுவரை கண்டிராத ஒரு அரசு வடிவத்தை உருவாக்குவதில் எப்படி தவறுகள் விழைவதையும் பின்னடைவுகளையும் தவிர்க்க முடியும்? பின்னடைவுகளை தடுத்து நிறுத்தவும் தவறுகளை சரி செய்யவும் சோவியத் கோட்பாடுகளை செயல்படுத்தும் முறையில் முன்னேற்றம் காணவும் நாம் இடைவிடாமல் போராட்டங்களை நடத்துவோம். அந்த முன்னேற்றம் முழுமை அடைய வெகுதூரம் செல்ல வேண்டும்" என்று லெனின் 1921ல் எழுதியதை நினைவில் கொள்வோம்.





படிப்பகம்

www.padippakam.com

## புரட்சிக்குப் பிறகு

'அமைதி, நிலம், சோவியத்துகளுக்கு அதிகாரம்' என்ற கட்டளைகளோடு புரட்சி அரசு லெனின் தலைமையில் செயல்படத்துவங்கியது. அரசு அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வது அவ்வளவு எளிதானதாக இல்லை. நிலங்களை இழந்த நிலப்பிரபுக்கள், ஜார் ஆட்சி கால பதவி சுகங்களை இழந்த அதிகாரிகள், தளர்நடை போடத் துவங்கிய சோவியத் அரசை முடமாக்க ஏகாதிபத்தியம் எடுத்த முயற்சிகள், சுற்றி வளைத்து அனைவரும் சேர்ந்து நடத்திய தாக்குதல்கள், உள்நாட்டு போர்கள் - இதையெல்லாம் தாண்டி வர வேண்டிய நிலை இருந்தது. அன்றைய ரஷ்யாவின் பொருளாதாரம் மிகவும் சிதைந்து போயிருந்தது. 1920, 1921ம் ஆண்டுகள் பஞ்சம் நிலவிய காலம், பல்லாயிரக்கணக்கில் மனிதர்கள் மாண்டுபோனார்கள். பள்ளிகள் இருந்தாலும் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை, குளிர்தாங்காமல் அடுப்பு வெப்பத்தில் மக்கள் முடங்கிக் கிடந்தார்கள். கிராமப்புறம், நகர்ப்புறம் என்று எந்த வேறுபாடுமின்றி பொருளாதார வளர்ச்சி மிகவும் குன்றியிருந்தது. ஆகவே பொருளாதார மீட்சியினைக் கொண்டு வர "புதிய பொருளாதார கொள்கை" (New Economic Policy - NEP) நடைமுறைப்படுத்தப்பட்டது. சோஷலிச, கூட்டுறவு மற்றும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் அம்சங்களைக் கொண்டதாக அது இருந்தது. ஆனால் மக்களுக்கு ஒரு புதிய சமூகம் படைப்பது குறித்த நம்பிக்கை இருந்தது. ரஷ்யா, சோஷலிச வழிமுறையில் ஒரு முற்போக்கான வளம் நிறைந்த நாடாக மலரும் என்று லெனின் பார்வையினை மக்கள் முழுமையாக கிரகித்துக்கொண்டார்கள் என்று "அன்னா லூயிஸ்டிராங்" தன்னுடைய "ஸ்டாலின் சகாப்தம்" (The Stalin Era) என்ற நூலில் எழுதுகிறார். அப்போதுதான், 1924ல் (லெனின் மறைவுக்குப் பிறகு) ரஷ்யா தன் சொந்தக் காலில் நிற்க வேண்டும், சோஷலிசத்தை கட்ட வேண்டும் என்ற கோட்பாட்டினை ஸ்டாலின் முன்வைக்கிறார். 'தேசிய கம்யூனிசம்' பேசுகிறார் ஸ்டாலின் என தத்துவார்த்த அடிப்படையில் குற்றச்சாட்டு எழுந்தது. ஆனால் அதற்கு 1925ல் சோவியத் கட்சியின் பதினான்காவது காங்கிரசின் ஒப்புதலை கோரியபோது, எவ்வித தடையுமின்றி அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மக்களின் விருப்பம், சிந்தனையோட்டம் ஆகியவைகளை மிகவும் துல்லியமாக மதிப்பீடு செய்யும் திறம் கொண்ட தலைவராக ஸ்டாலின் இருந்தார். "அன்னா" எழுதுகிறபோது அந்த மக்கள் விருப்பத்தை செயலாக்கும் திறனையும், அந்த செயல் மனிதகுல மேன்மைக்கு இட்டுச்செல்லும் என்ற தன்னுடைய நம்பிக்கையினை மக்களுடையதாக மாற்றும் திறனையும் அவர் கொண்டிருந்தார் என குறிப்பிடுகிறார். பின்பு சோவியத்தின் சாதனைகளை குறிப்பிட்டு ஒரு அமெரிக்க நிருபர் ஸ்டாலினிடம் "எப்படி நீங்கள் இந்த முடிவுகளை எடுத்தீர்கள்?" என்று கேட்டதற்கு ஸ்டாலினுடைய பதில் இதுதான். "எங்களிடம் தனி மனிதர்களின் முடிவு என்று எதுவுமில்லை... மற்றவர்களால் சரி செய்யப்படாத தனி மனித முடிவுகளில் தவறுகளின் சதம் அதிக அளவு இருக்கும் என்பதை அனுபவத்தில் நாங்கள் உணர்ந்திருக்கிறோம்". அதோடு அவர், கட்சியின் மத்திய மிட்டியில் அறிவியல், தொழில்துறை, விவசாயம் மற்றும் உலக நிகழ்வுகள் ஆகியவற்றை சிறப்பாக கற்றறிந்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களைக் கொண்டுதான் முடிவு எடுத்து சோவியத் வெற்றியினை உறுதி செய்திருக்கிறோம் என்று கூறுகிறார்.

## திட்டமிட்ட வளர்ச்சி

இந்த அடிப்படையில் உருவானதுதான் சோவியத் யூனியனின் ஐந்தாண்டு திட்டங்கள். "திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி" என்ற கோட்பாடு முதலாளித்துவ உற்பத்தி முறையில் பொருந்துவதில்லை. மக்களின் தேவைகளை புறக்கணித்து லாபத்தை குறிவைத்து செயல்படுவதால் கட்டுப்பாடில்லாத சுதந்திர சந்தை அதற்கு தேவைப்படும். சோவியத் திட்டம் எதைக் கொண்டுவந்தது? 1933ம் ஆண்டு ஜனவரியில், கட்சியின் மத்திய கமிட்டிக்கு ஸ்டாலின் கொடுத்த அறிக்கையில் முந்தைய பின்தங்கிய விவசாய நாடான ரஷ்யா தொழில்துறை வளர்ச்சியில் உலகின் இரண்டாவது இடத்திற்கு வந்திருப்பதை குறிப்பிடுகிறார். 5 ஆண்டு திட்டத்தின் இலக்குகள் நான்கேகால் ஆண்டுகளில் - அக்டோபர் 1928லிருந்து டிசம்பர் 1932 வரை முடிக்கப்பட்டுவிட்டன, தொழிலாளர் எண்ணிக்கை 11 மில்லியனிலிருந்து 22 மில்லியனாக உயர்ந்தது, உற்பத்தி இரு மடங்கானது, "முன்பு இரும்பு எஃகு ஆலைத் தொழில் நம்மிடையே இல்லை இப்பொழுது நம்மிடையே இருக்கிறது. டிராக்டர் தயாரிக்கும் நிறுவனம் முன்பு இல்லை, இப்போது இருக்கிறது. கார் தயாரிக்கும் தொழிற்சாலை முன்பு இல்லை, இப்போது இருக்கிறது"என்று வேறு பல துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தை குறிப்பிட்ட ஸ்டாலின். "நம்முடைய இந்த சாதனங்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளின் சாதனைகளை ஒளிமங்கச் செய்திருக்கின்றன" என்று கூறினார். துன்ப துயரங்கள் பலவற்றை தாண்டித்தான் இந்த முன்னேற்றத்தை சோவியத் யூனியன் கண்டது. உலக வரலாற்றில்



படிப்பகம்

www.padippakam.com

இவ்வளவு வேகமான வளர்ச்சியினை எந்த நாடும் பதிவு செய்தது கிடையாது. இந்த வளர்ச்சியின் வேகம் குறைக்கப்பட்டோ அல்லது தடைப் பட்டிருக்குமேயானால், சோஷலிச சமூக அமைப்பு ஏற்படுவது தள்ளிப்போகும், இல்லை யென்றால் நாடே பெரும் ஆபத்துக்குள்ளாகும் என்று சோவியத் மக்கள் கருதினார்கள். அந்த பொருளாதார மீட்சியின் விளைவு? ஐரோப் பாவின் முக்கிய பகுதியில் சோவியத் யூனியன் வலுவான சக்தியாக எழுந்தது. அது முத லாளித்துவ - ஏகாதிபத்திய சக்திகளைக் காட்டி லும் உள்ளார்ந்த குணாம்சத்தில் வேறுபட்ட தாக இருந்தது என்பது வரலாற்று உண்மை. அது ஒன்று திரட்டப்பட்ட தொழிலாளி வர்க்கத்தின் சக்தி என்பதும், எதையும் சந்திக்கும் உறுதி படைத்தது என்பதும்தான் அடிப்படையான வேறுபாடு. ஆகவே இந்த அமைப்பை அழித்து விடும் நோக்கத்தோடு ஏகாதிபத்தியம் செயல் படத் துவங்கியது ஜப்பான். மஞ்சூரியா பகுதியி லிருந்து சோவியத் எல்லையினை தொட்டுப் பார்க்க துவங்கியது, நாஜி ஜெர்மனி உக்ரைன் பகுதி ஜெர்மனியைச் சேர்ந்தது என்ற செய்தி யினை வெளியிட்டது. தங்களின் பொருளாதாரம் வலிமை பெறாதிருந்தால் கிழக்கு மேற்கு எல் லைகளில் படையெடுப்பை சந்திக்க வேண்டிய நிலை உருவாகியிருக்கும் என்று மக்கள் உணர்ந் தார்கள். தன்னுடைய ஜனவரி அறிக்கையில் ஸ்டாலின் "100 ஆண்டுகளாக பின்தங்கிய நாட்டை முடுக்கிவிடுவதிலிருந்து நாங்கள் ஒதுங்க முடியாது, ஏனெனில் நாடு பேரழிவை சந்தித் துக்கொண்டிருந்தது. அப்படி இருந்திருந்தால் மிகவும் நவீனரக ஆயுதங்களோடு உள்ள முத லாளித்துவ சூழலில் நிராயுதபாணியாக நாங்கள் நின்றிருப்போம்" என்று குறிப்பிட்டார்.

### விவசாயம் — புதிய மனிதர்கள்

30-களில் சோவியத் யூனியன் தன்புரட்சிகர செயல்பாட்டினை விவசாய அரங்கினில் மேற் கொண்டது, கூட்டுப்பண்ணை முறை அறிமுகப் படுத்தப்பட்டது. ஐந்தாண்டு திட்டத்தின் விளை வாக டிராக்டர் உற்பத்தி பெருகியது. அதை முழுமையாக பயன்படுத்தி உற்பத்தியினைப் பெருக்க துண்டு துண்டாக உள்ள நிலங்களை கூட்டுப் பண்ணையாக மாற்ற வேண்டிய தேவை எழுந்தது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி அதற் கான அறைகூவல் விடுத்தது. உற்சாகமாக விவ சாயிகள் பங்கேற்றனர். ஆனாலும் விவசாயிகள் மீது சில இடங்களில் கட்சி தலைமை நிர்பந்தம் கொடுத்ததாக குற்றச்சாட்டும் எழுந்தது. மிகவும் ஆர்வத்துடன் விவசாயிகள் கூட்டுப்பண்ணை யில் சேர்வது எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக வேகத்துடன் நிகழ்ந்தது. அந்த உற்சாகத் தில் சில தவறுகள் நடந்தன. ஸ்டாலின் "வெற்றியி லிருந்து எழுந்த மயக்கம் (Dizziness from Victory) என்று ஒரு அறிக்கை வெளியிட்டார். அது நிலைமையினை சரி செய்ததுடன் ஸ்டாலினை விவசாயிகளின் உன்னதத் தலைவன் என்ற நிலைக்கு உயர்த்தியது. அவர் அந்த புகழுரை களை ஏற்றுக்கொள்ளவில்லை. அது மத்திய கமிட்டியின் அறிக்கை என்று விளக்கினார். ஆனாலும் சுயவிமர்சனமாக சோவியக் கட்சி கூட்டுப்பண்ணை நடவடிக்கையினை பரிசீலனை செய்தது. கூட்டுப் பண்ணையினை நிர்வகிக்கும் திறன் படைத்த மேலாளர்கள் இல்லை, அதன் கணக்குகளை சரியாகவைத்துக்கொள்ளும் பயிற்சி பெற்றவர்கள் இல்லை, இயந்திரங்களை கையாள பயிற்சி பெற்றவர்கள் இல்லை. விவ சாயிகளின் பின் தங்கிய நிலை, நிலப்பிரபுக்களின் (குலாக்) வன்முறை, அதிகாரிகளின் முட்டாள் தனம் - இவையாவும் உற்பத்தியில் சிக்கலை உருவாக்கின. இதையெல்லாம் சரியாக கணிக்க வில்லை என மத்திய கமிட்டி கூட்டத்தில் ஸ்டாலின் ஒப்புக் கொண்டார். மாற்றம் காண துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்றே ஆண்டுகளில் விவசாய உற்பத்தி அதிக மானது. 'பஞ்சம், வறட்சி' போன்ற வார்த்தை களுக்கு இடமில்லாமல் போனது.

ஐரோப்பா மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் மாட்டிக்கொண்டிருந்த வேளை யில், குறிப்பாக அதன் தென்பகுதி கடுமையான வறட்சியினால் பாதிக்கப்பட்டிருந்த சூழலில், இந்த மாற்றம் நிகழ்ந்தது. பொருளாதார பலன்களைக் காட்டிலும் விவசாயிகளின் கல்வி மற்றும் பண்பாட்டு ரீதியான வளர்ச்சி போற்றத் தக்கதாக இருந்தது. விஞ்ஞானிகள், கலை இலக் கியங்களில் பயிற்சி பெற்றவர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கணைகள் என புதிய சமூகத்தின் பிரதிநிதிகள் தோன்றினார்கள் என 'அன்னா' குறிப்பிடுகிறார்.

புரட்சிக்குப் பிறகு பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் அந்த புதிய சமூகத்தில் பிரதிபலித்தது. புரட்சி அவர்களுக்கு அரசியல் மற்றும் சட்ட ரீதியான உரிமைகளை வழங்கியது. தொழில் வளர்ச்சி அவர்களுக்கு சமமான பொரு ளாதார அடித்தளத்தை கொடுத்தது. பாரம் பரியம் என்ற பெயரில் பல்வேறு ஒடுக்குமுறைக்கு உட்பட்ட பெண்களை அதிலிருந்து விடுவிப்பது அவ்வளவு எளிதான செயலல்ல. கல்வி, பிரச் சாரம், சட்டம், வேலை வாய்ப்பு என அனைத்து அம்சங்களிலும் அவர்கள் நிலை உறுதிப்பட்டது அந்த ஸ்டாலின் சகாப்தத்தில்தான். துவக்கத்தி லிருந்தே ஏழு ஆண்டுகள் யுத்தங்களை சந்தித்த நாடு, மிகப்பெரும் இளைஞர் பட்டாளத்தை,



படிப்பகம்

www.padippakam.com

வாழும் பூமியை அனைத்து அம்சங்களிலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என ஆர்வம் கொண்ட பட்டாளத்தை உருவாக்கியது. அறிவியல், கலை, விளையாட்டு என அனைத்து துறைகளிலும் சோவியத் யூனியன் பிற்காலத்தில் உயர்ந்து நின்றதற்கான சமூக, பொருளாதார அடிப்படையினையும் பண்பாட்டு தளத்தினையும் அந்த இளைஞர்கள் பெற்றதும் கறுப்பு வண்ணம் பூசப்படுகிற அந்த ஸ்டாலின் சகாப்தத்தில்தான். ஆனால் அது தனிமனித மேன்மையினால் அல்ல, மார்க்சிய-லெனினிய அடிப்படையில் உருவான கூட்டு சக்தியின் விளைவு. பாராசூட் பயிற்சி பெற்று தரையில் வந்து இறங்கிய நினா காமெனோவா என்ற இளம் பெண் சொன்னது, "என்னுடைய நாட்டின் வானம்தான் உலகிலேயே உயர்ந்த வானம்" - இதுவே சோவியத் இளைஞர்களின் புரட்சி கோஷமாக மாறியது.

## ஏகாதிபத்திய சதி வலைகள்

இந்த வளர்ச்சியினை ஏகாதிபத்தியம் விரும்புமா? எதற்கும் தயார் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை ஸ்டாலின் சுட்டிக் காட்டியதை, முன்பே குறிப்பிட்டதைப்போல், சோவியத் மக்கள் நிராயுதபாணியாக இருப்பதற்கு தயாரில்லை என்பதை நினைவில் கொள்வது சரியாக இருக்கும். பிரிட்டன், பிரான்ஸ் ஏகாதிபத்திய சக்திகள் வளர்ந்து வரும் சோவியத் யூனியனை ஒழித்துவிட வேண்டுமென்று விரும்பினர். ஹிட்லரும் 'கிழக்கில் வாழும் இடம்' வேண்டுமென்று சோவியத்தை விழுங்க வேண்டும் என்று முடிவு செய்தான். ஹிட்லரின் ஆசையினை பயன்படுத்திக்கொண்டு சோவியத் யூனியனை முடித்துவிடலாம் என்று ஏகாதிபத்திய சக்திகள் நினைத்தன. 1936ல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்பெயின் நாட்டின் மக்கள் முன்னணிக்கு எதிராக ஜெனரல் "பிராங்கோ"வின் ராணுவப் பிரிவு கலகத்தை துவக்கியது. முறையாக பயிற்சிபெற்ற ராணுவம் இல்லாத காரணத்தால் மக்கள் முன்னணியின் குடியரசு அரசாங்கம் அதற்கென ராணுவம் ஒன்றினை தயார் செய்ய முயற்சித்தது, அதற்கு வெளிநாட்டு உதவி தேவைப்பட்டது. இதற்கிடையில் நாஜிச ஹிட்லரும் பாசிச முஸோலினியும் பிராங்கோவுக்கு அனைத்து வகை உதவிகளையும் கொடுத்தனர். 1937 மார்ச் மாத முடிவில் சுமார் 1 லட்சம் துருப்புகளை முஸோலினி பிராங்கோவுக்கு கொடுத்தான். ஸ்பெயினின் குடியரசு ஆட்சி அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளிடம் உதவி கேட்டது. ஸ்பெயினின் உள்நாட்டு போரில் நாங்கள் தலையிடமாட்டோம் என்று சொல்லி அந்த நாடுகள் உதவி செய்ய மறுத்தன. இந்த ஏகாதிபத்திய நாடுகளும் பாசிஸ்ட் பிராங்கோ வெற்றிபெறுவதையே விரும்பினார்கள் என்பது தெளிவானது. ஆனால் சோவியத் யூனியன் ஸ்பெயின் குடியரசுக்கு உதவி செய்ய முடிவெடுத்தது. 1936லிருந்து 1939 வரை உள்ள கால இடைவெளியில் 648 விமானங்கள், 347 டாங்கிகள், 60 ஆயுதந்தாங்கிய மோட்டார் வண்டிகள், 1186 கனரக துப்பாகிகள், 20648 இயந்திர துப்பாக்கிகள், 4,97,813 கைதுப்பாக்கிகள் பெருமளவில் துப்பாக்கி ரவைகள், வெடிகுண்டுகள் ஆகியவற்றை சோவியத் யூனியன் கொடுத்தது. 1938ல் 85 மில்லியன் டாலர் நிதி உதவியினையும் கொடுத்தது. ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் "ஸ்பெயின் புரட்சிகர மக்களுக்கு உதவி செய்வது சோவியத் யூனியனின் உழைக்கும் மக்களின் கடமை. பாசிஸ்ட் ஒடுக்குமுறையிலிருந்து ஸ்பெயினை விடுவிப்பது ஸ்பெயினின் தனிப்பட்ட போராட்டமல்ல, முற்போக்கான மனிதகுலத்தின் நோக்கம் அதுதான்" என்று எழுதினார். மார்க்சிசம் கம்யூனிசம் என்ற உன்னத லட்சியங்களால் உத்வேகம் பெற்று பல நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் அந்தப் போரில் பங்கேற்றனர். 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஏகாதிபத்தியத்தின் விருப்பத்திற்கேற்ப அங்கே பாசிசம் வெற்றி பெற்றது. ஸ்டாலின் தலைமையில் சோவியத் யூனியன் ஆற்றிய அந்த சர்வதேச வரலாற்றுக் கடமை யினை நாம் மறக்கமுடியுமா?

இதற்கு முன்பு முதல் உலகப் போருக்குப்பின் ஜெர்மனியை கட்டுப்படுத்தும் வார்செல்ஸ் ஒப்பந்தத்தை ஜெர்மனி மீறுவதை பிரிட்டனும், பிரான்சும் கண்டும் காணாதது போல் இருந்தன. ஜெர்மனி மீண்டும் ராணுவ மயமாவதை தடுக்கும் நோக்கம் கொண்டது. அந்த ஒப்பந்தம். ஆனால் பிரிட்டனோ 1935ல் ஜெர்மனி அதன் கப்பல்படை கட்டுவதை (பிரிட்டனின் படை அளவில் 35 சதத்திற்கு மிகாமல்) அனுமதித்தது, பிரான்சை ஒட்டி இருந்த ராணுவ நடவடிக்கை விலக்கப்பட்ட பகுதி என அறிவிக்கப்பட்ட ரைன் லாண்ட் பகுதியினை 1936 மார்ச் மாதத்தில் ஹிட்லர் கைப்பற்றினார். பெரும்படையினை வைத்திருந்த பிரான்சு எந்த எதிர்ப்புக்குரலையும் எழுப்பவில்லை, 'எதிர்ப்பினை காட்டாதே' என பிரிட்டனும் ஆலோசனை வழங்கியது.

தாங்கள் விரும்புகிறபடி சோவியத் யூனியனை அழிக்கும் பணியினை ஹிட்லர் செய்து முடிப்பான் என்ற நம்பிக்கையில் "இந்த தலையீடாக் கொள்கையினையும், பகை தவிர்க்கும் கொள்கையினையும் பிரிட்டனும், பிரான்சும் கடைப்பிடித்தன.



படிப்பகம்

www.padippakam.com

## இரண்டாம் உலகப்போர் சோவியத் நிலை

சோவியத் கட்சியின் 18வது காங்கிரஸில் ஸ்டாலின் பேசும்போது, அவர்களின் நோக்கங்களை துல்லியமாக எடுத்துரைத்தார். இந்த தலையிடாக் கொள்கை என்பது தாக்குதல் நடத்துபவர்களின் மோசமான நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கம் கொண்டதல்ல, சீனாவுடன் அதற்கும் மேலாக சோவியத் யூனியனுடன் போரிடத் துடிக்கும் ஜப்பானை தடுத்து நிறுத்துவதற்கு அல்ல, ஜெர்மனி ஐரோப்பிய விஷயங்களில் நுழைவதையோ சோவியத் யூனியனோடு போரில் சிக்குவதையோ தடுக்கும் நோக்கம் கொண்டதல்ல, அனைத்து போர் வெறியர்களையும் போரில் ஆழமாக ஈடுபட அனுமதிக்கும் நோக்கம் கொண்டது. ரகசியமாக அதற்கு உதவும் நோக்கம் கொண்டது. ஒருவருக்கொருவர் போரிட்டு பலமிழந்து அவர்களை சோர்வுறச் செய்யும் நோக்கம் கொண்டது, பிறகு அவர்கள் போதுமான அளவு பலமிழந்த நிலையில் முழு பலத்துடன் உள்ளே நுழைந்து அமைதிக்கான முயற்சி என அறிவித்து பலமிழந்தவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கும் நோக்கம் கொண்டது. எளிமையான முயற்சி ஆனால் மலிவான முயற்சி. “மேலை நாடுகளின போர் தந்திரத்தை இதைக்காட்டிலும் தெளிவாக யாரும் சொல்ல முடியாது. ஹிட்லரின் நோக்கம் வேறுமாதிரியிருந்தது சோவியத் யூனியனோடு மோதுவதற்கு முன் ஜெர்மனியை அனைத்து வகையிலும் வலிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தான். 1938ல் ஆஸ்திரியா வீழ்ந்தது. அதே ஆண்டின் இறுதியில் செக்கோஸ்லோவேகியாவின் சுடேடான் பகுதியை மேலை நாடுகளின் ஒப்புதலோடு கைப்பற்றினான். 1940ல் டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சு (11 நாட்களில் விழுந்தது) என வசப்படுத்திக்கொண்டு ஹிட்லர் பிரிட்டனின் கதவை தட்டிக்கொண்டிருந்தான். ஆனால் கிழக்கே சோவியத் யூனியன் நிமிர்ந்து நிற்பதை அவனால் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. உடனே படையெடுக்க இயலாதபடி 1939ல் கையெழுத்திடப்பட்ட சோவியத் - ஜெர்மனி அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் தடுத்தது. ஏகாதிபத்திய நாடுகளிடையே (ஜெர்மன் உட்பட) உள்ள முரண்பாட்டை கூர்மையாக கவனித்து அதை சோவியத் யூனியன் பயன்படுத்திக் கொண்டது. ஜெர்மனியை போரில் சந்திக்க தன்னை தயாரித்துக்கொள்ள 22 மாத கால அவகாசம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் சோவியத்துக்குக் கிடைத்தது. ஸ்டாலினுடைய நுட்பமான ஆய்வுத்திறன் இந்த ஒப்பந்தத்தின் மூலம் வெளிப்பட்டது. ஜெர்மனி எந்த நேரத்திலும் தாக்கக் கூடும் என்பதை அவர் அறிந்திருந்தார். அதைத் தள்ளிப்போடும் உத்தியினை இந்த ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொண்டது கடைசியில் சோவியத் யூனியனை பாதுகாத்தது. 1941 ஜூலை 3, ஹிட்லர் சோவியத் யூனியனை தாக்கினான். அப்போதுதான் துவங்கியது சோவியத் மக்கள் குறிப்பிட்ட “மிகப்பெரிய தேசபக்த யுத்தம்”. லெனின்கிராட், ஸ்டாலின்கிராட் என பல போர்முனைகளை சோவியத் மக்கள் தீரமுடன் சந்தித்தனர். மாஸ்கோ தாக்கப்படும் என ஜெர்மனி படைத் தலைமை அறிவித்தபோது ஸ்டாலின் மாஸ்கோ வீதிகளில் இறங்கி செஞ்சதுக்கத்தில் வீரர்களை பார்வையிட்டபோது மக்கள் உறுதியோடு போராடும் உணர்வினை வெளிப்படுத்தினார்கள். மாஸ்கோவிலிருந்து 60 மைல் தூரத்திற்கு ஜெர்மன் படைகள் துரத்தியடிக்கப்பட்டன. ஸ்டாலின்கிராட் போர் ஒரு திருப்புமுனையாக இருந்தது என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 182 நாட்கள் அந்த நகர மக்கள் சோதனைமிகுந்த அந்தப் போரை வெற்றிகரமாக சந்தித்தார்கள். 1943ன் துவக்கத்தில் செஞ்சேனை வெற்றிபெறும் நிலையில் இருந்தது. 6 லட்சம் ஜெர்மன் ராணுவ வீரர்கள் அழிக்கப்பட்டனர். அதன்பிறகுதான், 1944 ஜூன் மாதத்தில், 1942லேயே அமெரிக்காவும் பிரிட்டனும் துவங்குவதாக ஒப்புக்கொண்ட இரண்டாவது போர் முனை துவங்கப்பட்டது. போரின் துவக்க கட்டத்தில் அன்று அமெரிக்க செனட் சபையின் உறுப்பினராக இருந்த ஹாரி எஸ். ட்ரூமன் “போரில் ஜெர்மனி வெற்றி பெறும் நிலையிலிருந்தால் ரஷ்யாவுக்கு உதவுவோம்”. ரஷ்யா வெற்றிபெறும் நிலையில் இருந்தால் ஜெர்மனிக்கு உதவுவோம் என்று சொன்னதை கவனத்தில் கொண்டால் இரண்டாவது முனை துவக்கப்பட அவர்கள் எடுத்துக்கொண்ட கால தாமதத்தை புரிந்துகொள்ள முடியும். 1941-45 வரை நடந்த அந்த உலகப்போர் பாசிசத்தின் தோல்வியில் முடிந்தது. ஒன்றுக்கொன்று முரண்பட்டு நிற்கும் இரண்டு சமூக அமைப்புகளிடையே நடந்த போர் அது. சோஷலிசத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாக மாற்றப்பட்டிருந்தது. சோவியத் மக்கள் ஸ்டாலின் தலைமையிலிருந்த சோவியத் கம்யூனிஸ்ட கட்சி அதற்கு மனிதகுலம் போற்றும் விடையினைக் கண்டார்கள். ஹிட்லர் கைப்பற்றியிருந்த நாடுகளெல்லாம் விடுதலை பெற்றன. மிகப்பிரபலமான ஜெர்மன் எழுத்தாளர் தாமன் மான் பெர்லின் நாடாளுமன்றக் கட்டடத்தில் அரிவாள்-சுத்தியல் சின்னம் பொறித்த கொடி ஏற்றியபொழுது, “இந்த உன்னத நேரம் வெற்றி பெற்றவர்களுக்கு மட்டுமல்ல, ஜெர்மனிக்கும் கூட, கொடிய விலங்கு வீழ்த்தப்பட்டுவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

தேசிய சோஷலிசம் என்ற அச்சமூட்டும் மற்றும் அறிவற்ற அரக்கனின் காலம் முடிந்துவிட்டது. ஹிட்லர் என்ற கறைபடிந்த ஜெர்மனி விடுதலை பெற்றுவிட்டது'' என்று எழுதினார். சோவியத் யூனியனை பாதுகாத்துக்கொண்டே உலகத்தை பாசிச பேராபத்திலிருந்து காத்து கடுமையான சோதனைகளையும் அளப்பரிய தியாகங்களை யும் உட்கொண்ட இந்த போரை வெற்றிகரமாக முடிப்பதில் ஸ்டாலின் ஆற்றிய பங்கை மறத்தல் அல்லது மறைத்தல் கூடுமா?

### சோவியத் மறு கட்டுமானத்தில்

போர் முடிந்த பிறகு போரின் அழிவிலிருந்து சோவியத் யூனியன் மீண்டும் கட்டப்பட்டது. அதன் வேகமான வளர்ச்சி அதிசயிக்கத்தக்க வகையில் இருந்தது. 2 கோடி மக்களை இழந்து, 1700 நகரங்கள் மற்றும் 27000 கிராமங்கள் முற்றிலு மாக அழிக்கப்பட்டு, 38000 மைல் ரயில்வே வழித் தடங்கள் சிதைக்கப்பட்டு, 3000 தொழில் நிறு வனங்கள் நொறுக்கப்பட்டு, பெரிய அணைக் கட்டுகள் உடைக்கப்பட்டு நின்ற சோவியத் யூனியன் எழுந்தது. சோஷலிசம் ரஷ்யாவில் கட்டமுடியமா? என்று தத்துவார்த்த நிலையில் இருந்து கேள்வி எழுந்தபோது ஸ்டாலின் விடுத்த அறைகூவல் இதுதான். ''கட்டுங்கள் இல்லை யெனில் பத்து ஆண்டுகளில் வெளிநாட்டு படை யெடுப்பாளர்களால் சிதைந்துபோய்விடுங்கள்''. சோவியத் மக்கள் ஒரு புதிய சமூகத்தை உரு வாக்கினார்கள். ஸ்டாலினின் அந்தக் குரலை அவர்கள் மீண்டும் கேட்டார்கள். தவிர்க்க முடி யாத பலம் வாய்ந்த உலக சக்தியாக சோவியத் யூனியன் மலர்ந்தது. செயற்கைகோளை விண் வெளியில் அனுப்பியது, 1959ல் யூரிகாகரின் விண் வெளி ஓடத்தில் உலகை வலம் வந்தது, வாலன்டினா டெரஷ்கோவா என்ற பெண்மணி விண்வெளியில் பறந்தது - இந்த அறிவியல் சாதனைகளை செய்து முடிப்பதற்கான அடித் தளம் இருந்தது. புதிதாக விடுதலை அடைந்த நாடுகளுக்கு ஏகாதிபத்திய தாக்குதலை தடுக்கும் அரணாக சோவியத் யூனியன் மாறியது. ஏற் கெனவே அதன் சமூகநலத் திட்டங்கள் முத லாளித்துவ நாடுகளில் தாக்கத்தை உருவாக்கி யிருந்தன. உலகம் முழுமையும் கம்யூனிச இயக்கங் கள் கிளர்ந்தெழுந்தன. கிழக்கு ஐரோப்பா, சீனா, வியட்நாம், வடகொரியா, கியூபா என புரட்சி யின் தளங்கள் விரிவடைந்தன. அற்புதமான மாற்றங்களை கொண்டுவந்த சோவியத் யூனியன் நிலைத்து நிற்கவில்லை என்பது கம்யூனிஸ்டுகள் சந்தித்த சோகமான அனுபவம்தான். அதனையும் அதையொட்டி நிகழ்ந்த மாறுதல்களையும் ஆழமான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். ஆனால் கடந்தகால வரலாற்று நிகழ்வுகளையும் அவைகளினூடே நின்று செயலாற்றிய மனிதர் களையும் நினைவிற்கு கொண்டுவருவது நாம் ஆற்ற வேண்டிய வரலாற்றுக் கடமையாக உள்ளது.

### அந்த மகத்தான மனிதர்

அப்படித்தான் ஸ்டாலினை நினைவில் கொள் கிறோம். தன்னுடைய கருத்தை மற்றவர் மேல் வலிந்து திணித்த சர்வாதிகாரி என்ற குற்றச்சாட்டு அவர் மீது வீசப்பட்டதுண்டு. நமது இயக்கம் பெற்ற அனுபவம் அதை நிரூபிக்கவில்லை. நமது தலைவர்கள் ஸ்டாலினை சந்தித்து இந்தியாவில் புரட்சிகர மாற்றம் கொண்டுவருவது குறித்து அவரிடம் விவாதித்தனர். ''எனக்கு இந்தியா வைப்பற்றி அதிகம் தெரியாது. எங்களுக்கு தெரிந்தது பொதுவான மார்க்சிய-லெனினிய மற்றும் இயக்க இயல் கோட்பாடுகள்தான். அந்த பொதுவான புரிதலிலிருந்து நாங்கள் உங்களுக்கு உதவி செய்ய முயற்சிக்கிறோம். அதை ஏற்றுக் கொள்வதோ திருத்துவதோ அல்லது ஏற்க மறுப்பதோ என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண் டும்''. இதுதான் ஸ்டாலின் நம் தலைவர்களுக்கு கொடுத்த ஆலோசனை. எல்லாம் தெரிந்த மாதிரி ஸ்டாலின் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ள வில்லை. மிகவும் தன்னடக்கத்துடன் பொறு மையாக செயல்பட்டார் என்று தோழர் பசவ புன்னையா தன் நினைவு குறிப்புகளில் எழுதி யிருக்கிறார். போரின் துவக்கத்தில் சோவியத் யூனியன் சில பின்னடைவுகளை சந்தித்தது. முடிவு எடுப்பதில் ஏற்பட்ட தவறுகளுக்காகவும், காலதாமதம் ஆனதற்கும் ஸ்டாலின் மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக மன்னிப்பு கேட்கக் கூட தயங்கவில்லை. மக்களின் உணர்வுகளை நன்கு புரிந்துகொள்ளும் மனிதராக இருந்தார். ஒரு விவசாய பெண்மணி, ''புல் வளர்கிற சப்தத் தைக்கூட அவரால் கேட்க முடியும்'' என்றார். கமிட்டி கூட்டங்களில் அதிகம் பேசாமலேயே பொதுக்கருத்தை உருவாக்கும் திறன் கொண்ட வராக இருந்தார் என்று எழுதுகிறார் 'அன்னா'. சிறந்த மார்க்சிய-லெனினிய தத்துவ ஆசானாக விளங்கினார். நாட்டையும் கட்சியினையும் காப்பாற்றும் முயற்சியில் நடந்த சில அத்துமீறல் நடவடிக்கைகள் அவரைப்பற்றிய எதிர்மறையான கருத்தை உருவாக்கியிருப்பதை மறுக்கமுடியாது. அவருடைய நினைவுநாளில் அனைத்தையும் பரிசீலித்துத்தான் நாம் நமது கருத்தினை உரு வாக்கிக்கொள்கிறோம். சாதனைகள் தவறுகளை விஞ்சி நிற்கின்றன என்று சீன கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தில் நமக்கு முழு உடன்பாடு உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

# அரசின் கொள்கை மாற்றங்களில் நீதிமன்ற தலையீடு அவசியம்

ஐ. ரத்தினவேல்

இந்தியாவின் நீதி பரிபாலனம் நடவடிக்கைகளில் கீழமை நீதிமன்றங்களுக்குள்ள பொறுப்புகளையும், அதிகார வரம்புகளையும் விட உச்ச நீதிமன்றத்திற்கும், உயர்நீதிமன்றங்களுக்கும் சில கூடுதலான பொறுப்புகளும் அதற்குரிய அதிகார வரம்புகளும் உள்ளன என கூறலாம். மத்திய அரசிற்கும், மாநில அரசு அல்லது அரசுகளுக்கிடையே ஏற்படுகின்ற தாவாக்களை விசாரிப்பதுமான அதிகார வரம்பு அரசியலமைப்பு சட்டம் சரத்து 131ன் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதுடன், இந்திய அரசியலமைப்பு சட்டம் பகுதி3ல் சரத்துகள் 12 முதல் 35 வரை இந்திய குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு பாதகம் இல்லாத வகைகளில் மத்திய மாநில அரசுகள் செயல்படுகின்றனவா என்பதனையும், இவ்வரசுகள் இயற்றுகின்ற சட்டங்கள், உருவாக்கிக் கொள்கின்ற விதிகள் - விதிமுறைகள், வெளியிடுகின்ற ஆணைகள் அடிப்படை உரிமைகளுக்கு விரோதமாக உள்ளனவா என விசாரிக்கவும் அவ்வாறு அடிப்படை உரிமைகளுக்கு விரோதமாக இருப்பின் அத்தகைய சட்டங்கள், விதிகள், ஆணைகளை செல்லாது என அறிவிக்கும் அதிகாரவரம்பையும் அரசியலமைப்பு சட்டம் உச்சநீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. மேலும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளாக இதன் முகப்புரையில் அறிவிக்கப்பட்டுள்ள, இறையாண்மை, சோசலிசம், மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் மக்களாட்சி ஆகிய கோட்பாடுகளுக்கெதிராக மத்திய மாநில அரசுகள் செயல்படாத வண்ணம் மேற்பார்வையிடுவதுடன் நீதி பரிபாலன நடவடிக்கைகளை நிர்வாக நடவடிக்கைகளில் இருந்து முழுவதுமாக பிரித்து சுதந்திரமான நீதிபரிபாலனத்தை உத்திரவாதப்படுத்துவதும், இந்திய குடிமக்கள் அனைவரும் நீதிபரிபாலனத்தில் பங்கு கொண்டு உரிய நீதி பெற்றிடும் வகையில் நீதிமன்ற நடவடிக்கைகளை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பினையும் அரசியலமைப்பு சட்டம் உச்சநீதிமன்றத்திற்கு வழங்கியுள்ளது. சரத்து 131ன் கீழ் உச்சநீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தவிர்த்து, மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் அரசியல் அமைப்பு சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கும் எதிரான மத்திய மாநில அரசுகளின் செயல்பாடுகளிலிருந்து மாநில மக்களை பாதுகாப்பதும், அடிப்படை உரிமைகளுக்கும் அடிப்படை கோட்பாடுகளுக்கெதிராக மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள், உருவாக்கும் விதிகள், வெளியிடும் ஆணைகள் முதலியவற்றை சரத்து 228-ன் கீழ் செல்லாது என அறிவிக்கும் அதிகாரவரம்பினை அரசியலமைப்பு சட்டம் உயர்நீதிமன்றங்களுக்கும் வழங்கியுள்ளது. மேலும் சரத்து 36 முதல் 51 வரை அறிவிக்கப்பட்டுள்ள அரசை நெறிமுறைப்படுத்தும் கோட்பாடுகளை பின்பற்றி மத்திய மாநில அரசுகள் தங்களது கொள்கைகளை உருவாக்கி செயல்படுகின்றனவா எனவும் அங்ஙனம் செயல்படும் வகையில் உரிய அறிவுறுத்தல்களையும் வழிகாட்டுதல்களையும் அரசுகளுக்கு வழங்கிடும் பொறுப்பினையும், அரசியலமைப்பு சட்டம் உச்சநீதிமன்றத்திற்கும், உயர்நீதிமன்றங்களுக்கும் வழங்கியுள்ளது.

பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் அமைக்கும் உரிமை, கூட்டம் கூடும் உரிமை, சட்டத்தின் முன் அனைவரும் சமம், தீண்டாமை ஒழிப்பு, உயிர் வாழ்வதற்கான உரிமை, தனி நபர் உரிமை, வேலை வாய்ப்பில் சம உரிமை, சாதி, இனம், மதம், பாலினம் சார்ந்த வேறுபாடிண்மை, என இந்திய அரசியலமைப்பு சட்டம் வழங்கிய பல்வேறு அடிப்படை உரிமைகளை சுதந்திர இந்தியாவின் முதல் 50 ஆண்டுகால, நீதிபரிபாலன செயல்பாடுகள் உறுதி செய்து உத்திரவாதப்படுத்தியதுடன் மத்திய மாநில அரசுகள் சரத்து 36 முதல் 51ல் குறிப்பிட்டுள்ள மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்திடும் வகைகளில் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் பல தீர்ப்புகளையும் வழங்கியுள்ளன. ஆனால் கடந்த 10 ஆண்டு கால செயல்பாடுகள் குறிப்பாக, உலகமயம், தனியார் மயம், தாராளமயம் ஆகிய கொள்கைகள் செயல்பாட்டிற்கு வந்த பின்னர், மத்திய மாநில அரசுகளின் செயல்பாடுகளும், கொள்கைகளும், உச்சநீதிமன்றம்-உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புகளும் இதுவரை வளர்த்தெடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை பலவீனப்



படிப்பகம்

www.padippakam.com

*இலவச சட்ட உதவி நடவடிக்கைகள் இந்தியா முழுவதும் பெறும் அளவில் வளர்த்தெடுக்கப்பட்டு இருப்பினும், உச்சநீதிமன்றத்தை அனைத்து குடிமக்களும் சுலபமாக அணுகி நீதிபெற்றிட உத்திரவாதம் செய்யப்படவில்லை.*

படுத்துவதாகவும், இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரையில் அறிவிக்கப்பட்டுள்ள இறையாண்மை, சோசலிசம், மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் மக்களாட்சி ஆகிய அடிப் படை கோட்பாடுகளை பலவீனப்படுத்துவதாக வும் அமைந்துள்ளன.

உச்சநீதிமன்றம் கல்வி உரிமை சம்மந்தப்பட்ட மோகினி ஜெயின் மற்றும் கர்நாடக அரசுக்கும் இடையே நடந்த வழக்கில் சரத்து 36 முதல் 51 வரையிலான அரசை நெறிமுறைபடுத்தும் கோட் பாடுகளை அடிப்படை உரிமைகளில் இருந்து பிரித்து பார்க்கக் கூடாது எனவும் இரண்டும் ஒன்றுக்கு ஒன்று சார்பானவை எனவும், அரசுகள் மக்கள் தங்களது அடிப்படை உரிமைகளை அனுபவிக்கும் வகையில் அரசை நெறிமுறை படுத்தும் கோட்பாடுகளை அமல்படுத்த வேண்டும் என தீர்ப்பளித்தது. அதாவது வேலை வாய்ப்பை ஏற்படுத்துதல், பொது சுகாதாரத்தை பேணுதல், மருத்துவம் வழங்குதல், வாழ் வதற்குரிய கூலியை நிர்ணயித்தல், கல்வி அளித்தல், இலவச சட்ட உதவி வழங்குதல், சத்துணவு வழங்குதல், உணவு உத்திரவாதப் படுத்துதல், சுற்றுச்சூழலை பேணுதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை அரசு மேம் படுத்துவதன் மூலமாகவே மக்கள் தங்களது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதை உத்திர வாதப்படுத்த முடியும் எனவும், மேற்கண்ட பணிகளில் அரசின் பங்களிப்பு அவசியமானது எனவும் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதுபோல் Francis coralimulin Vs Administrator வழக்கில் நீதிபதி பகவதி அவர்கள் சரத்து 21 வழங்கியுள்ள உயிர்வாழ்வதற்கான உரிமை என்பது, மனிதன் கௌரவமாக வாழ அவசியப் படும் உணவு, உடை, இருப்பிடம், கல்வி, சுகா தாரம், ஆகியவைகளை உள்ளடக்கியதாகும் என விவரித்து தீர்ப்பளித்தார். ஆனால் உலகமயம் மற்றும் தனியார்மய கொள்கைகள் சகல துறை களையும் சந்தை நலன்களுக்கேற்ப மாற்றிவரு கின்ற இன்றையவேளையில், மக்கள் நல அரசின் கோட்பாடுகளை சந்தை நிலைமைகளுக் கேற்பவும், பெருவாரியான மக்கள் நலன்களுக்கு விரோதமாகவும் மாற்றி வருகின்றன என்பதனை கடந்த 10 ஆண்டுகளில் இயற்றப்பட்டுள்ள சட்டங்கள் மூலமாகவும் கொண்டுவரப் பட்டுள்ள சட்டதிருத்தங்கள் மூலமாகவும் நாம் உணர முடியும். மக்களின் அடிப்படை உரிமை களை பாதுகாப்பதும், அதற்குகந்த வகைகளில் அரசின் நெறிமுறைபடுத்தும் கொள்கைகளை உருவாக்கி செயல்படுத்துவதுமே மத்திய மாநில அரசுகளின் பிரதான பணிகள் என்கிற நிலை பாடு, சந்தை நிலைமைகளுட்பட்டு மக்கள் அடிப்படை உரிமைகளை அனுபவிக்க வேண்டும் எனவும், சந்தை நிலைமைகளுக்கேற்பவே அரசின் நெறிமுறைபடுத்தும் கோட்பாடுகள் உருவாக் கப்படும் என்கிற திசைவழியில் கொள்கைகள் மாற்றப்படுகிறது. இந்தியாவின் நீதிபரிபாலன நடவடிக்கைகளும் இதற்கேற்பவே மாற்றப் படுகின்றன.

இந்திய அரசிலமைப்பு சட்டத்தின் சரத்து 39(D) ஒரே விதமான வேலைப்பார்ப்பவர்களி டையே ஒரே விதமான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதை உத்திரவாதம் செய்கிறது. ஆனால் தனியார் நிறுவனங்கள் மட்டுமின்றி அரசும் தனது எல்லாத்துறைகளிலும் தற்காலிக பணியாட்களை நியமனம் செய்து குறைந்த பட்ச ஊதியத்தை மட்டுமே வழங்குகிறது. தற்காலிக பணியாளர்கள் நியமனத்தை மறைமுகமாக அனுமதிக்கும் வகைகளில் நீதிமன்றங்கள் தீர்ப்பு களை வழங்கி வருகின்றன. சரத்து 43 தரமான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற அளவில் ஊதியம் வழங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினாலும் குறைந்த பட்ச ஊதிய சட் டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச ஊதியத்தை விட குறைவான ஊதியத்தையே பெரும்பாலான நிறுவனங்கள் தொழிலாளர் களுக்கு வழங்கி வருகின்றன. இந்நிறுவனங்கள் மீது அரசுகளும் நடவடிக்கை எடுப்பதில்லை. அரசு நடவடிக்கை எடுக்க நிர்பந்திக்கும் வகையில் இன்றைய நீதிமன்ற தீர்ப்புகளும் இல்லை. ஒரே விதமான வேலையை செய்தாலும், தற்காலிக பணியாளர்கள் நிரந்தர பணியாளரை விட மிக மிக குறைவான ஊதியத்தை பெறுவது இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தொழிற் தகராறுகள் சட்டம், தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களில் உலகமய கொள்கைகளில் ஒன்றாகிய அமர்த்து-துரத்து என்கிற கொள்கையை அமல்படுத்தும் வகையில் பல்வேறு சட்டத்திருத்தங்களை அரசுகள் கொண்டு வந்து எவ்வித உரிமைகளும் அற்ற கொத்தடிமைகளாய் தொழிலாளிகளை வேலை



படிப்பகம்

வாங்க அனுமதித்துள்ள இன்றைய சூழ்நிலையில் நீதிமன்றங்களும் அமர்த்து-துரத்து என்ற கொள்கையை அங்கீகரிக்கும் வகையிலேயே தீர்ப்புகளை வழங்கி வருகின்றன. இந்திய அரசிய லமைப்பு சட்டம் சங்கம் அமைத்தல் உரிமையை அடிப்படை உரிமையாக வழங்கியுள்ளது. ஆனால் சுதந்திரம் அடைந்த 60 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தொழிலாளர்கள் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் சங்கம் அமைக்கும் உரிமைகோரி போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் பட்ட 93வது அரசியலமைப்பு சட்டத்திருத் தத்தின்படி சரத்து 21ல் புதிதாக சரத்து 21 (A) இணைக்கப்பட்டு அதன்படி 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் இலவச கட்டாய கல்வி அடிப் படை உரிமையாக்கப்பட்டது, என்றாலும் சமீப காலங்களில் கல்வித்துறையில் தனியார் நிறுவ னங்களின் பங்களிப்பு மிக அதிகமாகியிருப்பதும், (Foreign Educational Institutions Bill) 2010ன் படி அந்நிய நிறுவனங்களையும் அதன் முதலீடுகளை யும் கல்வித்துறையில் அனுமதித்துள்ளதும் கல்வியை வியாபாரமாக மாற்றியுள்ளதே அன்றி நாகரிக வாழ்விற்கு அடிப்படையாக விளங்கும் கல்வியை அனைவருக்கும் உத்திரவாதப்படுத்த வில்லை. சரத்து 41 வழங்கியுள்ள கல்வி உரிமை வயது வரம்புகளுக்குட்பட்டதன்று. அரசுகள் தங்கள் வருமானங்களுக்கு ஏற்பவும் வளர்ச்சிக்கு உகந்த வகையிலும் மக்கள் விரும்புகிற அளவிற்கு அவர்கள் கல்வி பயில வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி தரவேண்டும் என சரத்து 41 கூறுகிறது. இலவச உயர்கல்வியை வசதியற்ற அனைவருக்கும் உத்திரவாதப்படுத்தவில்லையெனில், 14 வயதுக்குட்பட்ட இலவச கட்டாய கல்வி என்பது உலகமய கல்வி கொள்கைகளுக்கான கல்வி சந்தையை உருவாக்கும் பணியாகவே அமையும். (Unnikrishnan Vs State of Andhrapradesh) வழக்கில் மக்கள் அவர்களது வசதிக்கேற்ப கல்வி பயிலும் உரிமையை கோரலாம் என தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம், இன்று கல்வித்துறையை வியாபாரமாக்கிவரும் இன்றைய அரசின் கொள்கைகள் மீதும் அதன் நடவடிக்கைகள் மீதும் உரிய தலையீடு செய்யவில்லை எனலாம்.

சரத்து-47 பொது சுகாதாரத்தை பேணுவதில் அரசின் பங்களிப்பை வலியுறுத்துகிறது. (Paschim Banga Khat Mazdoor Samity Vs State of West Bengal) வழக்கில் மருத்துவ வசதிகளை மக்களுக்கு வழங்கவேண்டிய கடமை அரசுகளுக்கு உண்டு எனவும், காலம் தாழ்த்தி வழங்கப்படும் மருத்துவ உதவிகளால் ஏற்படும் விளைவுகளுக்கும் அரசே பொறுப்பு எனவும் அத்தகைய மருத்துவ மனைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட

***வேலை உரிமை, சுகாதார உரிமை, கல்வி உரிமை ஆகிய உரிமைகளை உள்ளடக்கி உயிர் வாழ்வதற்கான உரிமையை உச்சநீதிமன்றம் சுதந்திர இந்தியாவின் முதல் 50 ஆண்டுகளில் பலப்படுத்தியது என்றால், உலகமயம் கடந்த பத்து ஆண்டுகளில் உயிர்வாழ்வதற்கான உரிமையை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளது.***

வேண்டும் எனவும் மருத்துவ வசதி பெறுவது சரத்து 21 வழங்கியுள்ள உயிர்வாழ்வதற்கான உரிமையில் உள்ளடங்கியதாகும் என உச்ச நீதிமன்றம் முன்னர் தீர்ப்பு அளித்தது. ஆனால் உலகமய கொள்கைகள் இன்று இந்திய சேவை துறைகளில் ஒன்றாக விளங்கிய சுகாதாரத் துறையையும் மிகப்பெரிய வணிகத்துறையாக மாற்றியுள்ளது. கடந்த ஆண்டு 30.6.2011 வரையில் ரூபாய் 58,824/- கோடிக்கு இந்தியா முழுவதும் மருந்து மாத்திரை வியாபாரம் நடைபெற்றதாக கூறும் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் அந்நிய முதலீடுகளை அனுமதிப்பதன் மூலம் மேலும் மருந்து சந்தை வளர வாய்ப்புண்டு என இந்திய மருந்து சந்தை குறித்து முதலாளிகள் பெருமைப் பட்டுக் கொள்கின்றனர். (Business India Dec. -11, 2011). புற்றீசல் போல் தனியார் மருத்துவமனைகள் பெருகி, வளர்ந்து வந்ததாலும் இன்று பொது சுகாதாரம் பேணிக்காக்கப் படவில்லை. அரசு மருத்துவ காப்பீடு திட்டங்கள் என்கிற பெயரில் மத்திய மாநில அரசுகள் தங்களது பொறுப்பை தனியார் மருத்துவமனைக்கு மாற்றிவிட விழை கின்றன. நகரை தூய்மையாக பராமரிக்காதது உயிர் வாழ்வதற்கான உரிமையை பாதிக்கும் செயலாகும் என (L.K. Koolwal Vs State of Rajastan) என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கிய உச்சநீதிமன்றம் மக்கள் நலன்களுக்கு விரோதமாக பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ துறைகளில் மத்திய மாநில அரசுகள் கொண்டு வரும் மாற்றங்கள் மீதும் உரிய தலையீடு செய்யவில்லை. சுகாதார மான குடிநீரை மக்களுக்கு வழங்குவது அரசின் கடமை என (Attakoya Thangal Vs Union of India) வழக்கில் தீர்ப்பு வழங்கி உயிர் வாழ்வதற்கான உரிமையை பலப்படுத்தியது உச்சநீதிமன்றம். இன்று இந்தியாவில் குடிநீர் வியாபாரமே கொள்ளை லாபம் கொடுக்கும் அமோக

www.padippakam.com

*சமீபமாக, பெருகி வரும் சாலை விபத்து மரணங்கள், மரணங்கள், சிறைச்சாலை மரணங்கள் குறித்து போதிய முக்கியத்துவம், உரிய அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும் மத்திய மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் வழங்கவில்லை என்றே கூறலாம்.*

வியாபாரமாகும். இந்தியாவின் பன்னாட்டு நிறுவனங்களும், அந்நிய பன்னாட்டு நிறுவனங்களும் பல லட்சம் கோடி ரூபாய்களுக்கு இந்தியா முழுவதும் குடிநீர் வியாபாரத்தை லாபகரமாக செய்து வருகின்றன. சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் சந்தையில், சுத்திகரிக்கப்படாத சாதாரண குடிநீர் அரசின் வினியோகத்தில் என்பதே இன்றைய நிலைமை. பலவிதமான சுகாதார சீர்கேடுகளுக்கு குடிநீர் அடிப்படை காரணமாக இருப்பினும் சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீரை இலவசமாக அனைத்து மக்களுக்கும் வழங்க மத்திய மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. நீதிமன்றங்களும் அரசுகளை நிர்பந்திக்கவில்லை.

சரத்து 39(A) அனைவரும் நீதிபெறும் வகையில் இலவச சட்ட உதவி ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறது. வருமானமின்மையால் ஒருவருக்கு நீதி வழங்குவது மறுக்கப்படக் கூடாது என்கிற கொள்கையை இது வலியுறுத்துகிறது. நீதிபெறும் உரிமையை இது அனைவருக்கும் உரித்தாக்குகிறது. இலவச சட்ட உதவி நடவடிக்கைகள் இந்தியா முழுவதும் பெறும் அளவில் வளர்த்தெடுக்கப்பட்டு இருப்பினும், உச்சநீதிமன்றத்தை அனைத்து குடிமக்களும் சுலபமாக அணுகி நீதிபெற்றிட உத்திரவாதம் செய்யப்படவில்லை. நூற்றுக்கணக்கான புதிய சட்டங்களும் சட்டத்திருத்தங்களும் கொண்டுவரப்படுகின்ற இன்றைய சூழலில், அனைவரும் சுலபமாக உச்சநீதிமன்றத்தை அணுகக் கூடிய வகையில் உச்சநீதிமன்றத்தின் கிளையை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் துவங்குவது என்பது சட்டத்துறையிலும், நீதித்துறையிலும் ஏற்பட்டுவரும் மாற்றங்களிலிருந்து மக்கள் தங்கள் உரிமைகளை பாதுகாத்து கொள்வதற்கு மிகவும் அவசியமானதாகும். இதுவே உச்சநீதிமன்ற நீதிபரிபாலன நடவடிக்கைகளை இன்று மேம்படுத்தும். ஆனால் கௌரவத்தையும், பெருமையையும் முன்னிலைப்படுத்தி பிராந்திய உச்சநீதிமன்றங்களுக்கு மறுப்பு தெரிவிப்பது வருந்தத்தக்கதாகும். அனைத்து குடிமக்களும் உச்சநீதிமன்றத்தினை சுலபமாக அணுகி நீதி பெற்றிட முடியும் என்பதில்தான் அதன் பெருமையும், கௌரவமும் உள்ளது.

சரத்து 50 நீதிபரிபாலன நடவடிக்கையினை நிர்வாக நடவடிக்கைகளில் இருந்து பிரித்து வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இருப்பினும் பல்வேறு நீதிபரிபாலன நடவடிக்கைகள் (சீட்டு வழக்குகள், கூட்டுறவு வழக்குகள் தொழிலாளர்கள் வழக்குகள்) நிர்வாகம் சார்ந்த நடவடிக்கைளாகவே இன்றும் உள்ளன. உலகமயம் நீதிபரிபாலனத்தில் நிர்வாகம் சார்ந்த நீதிபரிபாலனத்தை வளர்க்கவே விரும்புகிறது. (Intelectual Property Appellate Tribunal, Pollution Tribunal, Consumer Tribunal ) என பல்வேறு வகையான தீர்ப்பாயங்களை ஏற்படுத்தி நீதிபரிபாலனத்தை நிர்வாகம் சார்ந்தவையாக மாற்றுகின்றன. நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக நிலுவையில் இருக்கும் Legal practioners Act , 2010 சட்டம் வழக்கறிஞர்கள் மீதான புகார்களை விசாரிக்கும் புதியதோர் அமைப்பை வலியுறுத்துகிறது. அந்நிய சட்ட நிறுவனங்களையும், வழக்கறிஞர்களையும் எவ்வித நிபந்தனையுமின்றி இந்தியாவில் வழக்கறிஞர்கள் பணிபுரிய அனுமதிக்க நடவடிக்கை எடுத்துவரும் மத்திய அரசு, இந்திய வழக்கறிஞர்களுக்கு மட்டும் வழக்கறிஞர் பதிவுக்கு பின்னர் தகுதித்தேர்வை நிபந்தனையாக அறிமுகப்படுத்தியுள்ளது. கார்பரேட் நிறுவனங்களுக்கிடையே ஏற்படும் தாவாக்களை உடனுக்குடன் விசாரித்து தீர்ப்பு வழங்கிடும் வகையிலும், அனைவருக்குமான நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து கார்பரேட் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கிடும் வகையிலும் உயர்நீதிமன்றங்களில் கமர்சியல் பெஞ்ச் என்கிற சிறப்பு நீதிமன்றத்தினை துவங்குவதற்கான சட்டத்தை இந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றியுள்ளது மத்திய அரசு. இந்நடவடிக்கைகள் உலகமய கொள்கைகள் சார்ந்த நீதித்துறை மறுசீரமைப்பு நடவடிக்கைகளாகும்.

வேலை உரிமை, சுகாதார உரிமை, கல்வி உரிமை ஆகிய உரிமைகளை உள்ளடக்கி உயிர் வாழ்வதற்கான உரிமையை உச்சநீதிமன்றம் சுதந்திர இந்தியாவின் முதல் 50 ஆண்டுகளில் பலப்படுத்தியது என்றால், உலகமயம் கடந்த பத்து ஆண்டுகளில் உயிர்வாழ்வதற்கான உரிமையை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டில் சாலை விபத்துகளில் இந்தியா முழு



படிப்பகம்

www.padippakam.com

வதும் மரணம் அடைந்தவர்களின் எண்ணிக்கையில் 2 லட்சத்திற்கும் மேல். மோட்டார் வாகன தயாரிப்பில் இந்தியாவில் முதலிடம் என பெருமைப்பட்டுக் கொள்ளும் தமிழகம் சாலை விபத்திலும் முதலிடத்தில் உள்ளது. இந்திய அரசின் 2006ம் ஆண்டின் புள்ளி விபரப்படி இந்தியாவில் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 118112 ஆகும். இதிலும் தமிழகமே முதலிடம். தற்கொலை செய்து கொள்வோரில் கம்ப்யூட்டர் துறையில் பணிபுரிபவர்களும், சுயத்தொழில் செய்பவரும் 41 சதம் என்பது அதிர்ச்சியான புள்ளி விவரம் ஆகும். குடும்ப பெண்கள் 21.2 தற்கொலை செய்து கொள்கின்றனர் என்பது உலகமயம் இந்திய குடும்பங்களது மீது ஏற்படுத்தும் பாதிப்பை வெளிப்படுத்துகிறது. தனிநபர் உரிமையை உத்திரவாதப்படுத்துவதாக பெருமைப்பட்டுக் கொள்ளும் உலகமய கொள்கைகளின் விளைவுகளே பெருகி வரும் இந்த தற்கொலைகள். சட்டத்தின் ஆட்சியை வலியுறுத்தும் உலகமய கொள்கைகள் சிறை மரணங்களையும் என்கவுண்டர் மரணங்களையுமே பெருகிட செய்துள்ளன.

1993 முதல் 2009 வரை தேசிய மனித உரிமைகள் ஆணையம் 2318 சிறை மரணங்களுக்கான வழக்குகளை பதிவு செய்துள்ளன. இதில் மகாராஷ்ட்ரா மாநிலம் முதலிடமும் தமிழ்நாடு 8வது இடமும் வகிக்கின்றன. போலிசாரையே சிறந்த ஹீரோக்களாக காட்டிவரும் சினிமாக்கள் மறைமுகமாக என் கவுண்டர் மரணங்களை நியாயப்படுத்துகின்றன. சட்டப்படியான வழிமுறைகள் அன்றி ஒருவனது உயிர் பறிக்கப்படக் கூடாது என்ற உரிமையை அடிப்படை உரிமையாக அரசியலமைப்பு சட்டம் இந்திய குடிமக்கள் அனைவருக்கும் வழங்கி இருந்தாலும், எவ்வித விசாரணையும் இன்றி, நீதிமன்ற தீர்ப்புகளும் இன்றி, மரண தண்டனை வழங்கும் உரிமையை போலிசார் எடுத்துக் கொள்வதையே என் கவுண்டர் மரணங்கள் நிரூபிக்கின்றன. வளர்ந்து வரும் என்கவுண்டர் மரணங்கள், அரசியலமைப்பு சட்டத்தின் அடிப்படை நோக்கங்களை நிர்மூலமாக்குகின்றன. 1993 முதல் 2009 வரையிலான 16 ஆண்டுகளில் 716 என்கவுண்டர் மரணங்களை நடத்தி உத்திரபிரதேச மாநிலம் முதலிடம் வசிக்கின்றது. பம்பாயை சேர்ந்த காவல் ஆய்வாளர் பிரதீப்சர்மா 104 என் கவுண்டர் கொலைகளையும், துணை ஆய்வாளர் தயாநாயக் 82 என்கவுண்டர் கொலைகள் செய்திருப்பதையும் பெருமையாக பத்திரிக்கைகள் வெளியிடுகின்றன. தமிழகத்தில் என்கவுண்டர் மரணங்கள் அதிகரித்து வருவது வருந்தத்தக்கது. எல்லா அடிப்படை உரிமைகளையும் விட உயிர் வாழ்வதற்கான உரிமையே மிகவும் பிரதானமானதாகும் எனவும் இவ்வுரிமை எவ்வகையிலும் பாதிக்கப்படாத வண்ணமே அரசுகளின் நடவடிக்கைகள் அமைய வேண்டும் எனவும், இவ்வுரிமை பாதிக்கப்படும் பட்சத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு உயிர் வாழ்வதற்கான உரிமையை அரசுகள் காக்க வேண்டும் எனவும் உச்சநீதிமன்றம் பல வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கியிருப்பினும், சமீபமாக, பெருகி வரும் சாலை விபத்து மரணங்கள், மரணங்கள், சிறைச்சாலை மரணங்கள் குறித்து போதிய முக்கியத்துவம், உரிய அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும் மத்திய மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் வழங்கவில்லை என்றே கூறலாம்.

உலகமயம் தனியார்மயம் கொள்கைகள் மக்களின் அடிப்படை உரிமைகளை பலவீனப்படுத்துவதுடன், அரசிலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசின் நெறிமுறைப் படுத்தும் கோட்பாடுகளில் சந்தை நலன்களுக்கு ஏற்ப மாறுதல்களை செய்து செயல்படுத்தி வருவதுடன், அதற்குகந்த வகையில் நீதித்துறை நடவடிக்கைகளையும் மாற்றி வருகின்றன. மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் அரசை நெறிமுறைப்படுத்தும் கோட்பாடுகள் மீதான உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் பொறுப்பினையும், அதிகார வரம்பினையும், இன்றைய நிலைமைகளிலிருந்து மறுபரிசீலனை செய்வது மட்டுமே இந்திய நீதிமன்றங்களின் 150 ஆண்டு கால வரலாற்று சிறப்பை பேணிக்காத்திட உதவும்.

பிரிட்டன் பாராளுமன்றத்தால் 1861ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய உயர்நீதிமன்றங்கள் சட்டத்தின் மூலம், 14.8.1862ம் நாள் துவங்கப்பட்ட பம்பாய் உயர்நீதிமன்றம், 15.8.1862ம் நாள் துவங்கப்பட்ட மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மற்றும் செப்டம்பர் 1862ல் துவங்கப்பட்ட கல்கத்தா உயர்நீதிமன்றம், ஆகிய மூன்று உயர்நீதிமன்றங்கள் துவங்கி 150 ஆண்டுகள் நிறைவடைந்ததை இந்திய நீதிமன்றங்கள் சிறப்பாக கொண்டாடி வருகின்ற இன்றைய சூழலில், இந்திய அரசியலமைப்பின் அடிப்படை கோட்பாடுகளையும் அது மக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளையும் இதற்கேற்ப வகுக்கப்பட்டுள்ள அரசின் நெறிமுறைப் படுத்தும் கோட்பாடுகளையும் இவைகள் மீதான இந்திய நீதிமன்றங்களின் கடந்தகால பங்களிப்பையும், புரிந்துகொள்வதுடன் இதில் இன்று உலகமயம்-தனியார்மயம்- கொள்கைகள் ஏற்படுத்தி வரும் மாறுதல்களையும் இதற்கேற்ப மாறிவரும் நீதிமன்றங்களின் நிலைபாடுகளையும் புரிந்து கொள்வதே, நீதிமன்ற நடவடிக்கைகளில் சந்தை நலனை புறந்தள்ளி மக்கள் நலனை முன்னிலைப்படுத்த உதவும். இதுவே இந்திய நீதிமன்றங்களின் வரலாற்றிற்கு பலம் சேர்க்கும். ■



படிப்பகம்

www.padippakam.com

# ஏ.கே. கோபாலன் வாழ்க்கையில் காந்தியிசம்

**நா**ன் சோவியத் யூனியனுக்கு வந்து சுமார் எட்டு மாதங்களாகின்றன. உடனடியாக தாயகம் திரும்ப வேண்டுமென்று கட்சி தந்தியடித் திருந்தது. ஆயினும் திரும்புவதற்கு முன் சில இடங்களைக்கூட பார்க்க வேண்டுமென் றெண்ணினேன். ருஷ்யாவின் மிகப்பழமை வாய்ந்த பஞ்சாலை ஒன்றைப் பார்க்கச் சென் றேன். அன்று அதற்கு 145 வருடத்திய பழக்கம் இருந்து வந்தது. அக்டோபர் புரட்சியில் உயிர் நீத்த தொழிலாளிகளின் நினைவுச் சின்னத்தைத் தான் அந்த பஞ்சாலைக்குள் புகும்பொழுது நாம் முதல் முதலாகப் பார்ப்பது, அந்தச் சின்னத்திற்கு அருகாமையில் ஆலையின் மாதிரித் தொழிலாளி களின் படங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன. சீனாவிலும், ருஷ்சியாவிலும், இதர சோஷ லிஸ்டு நாடுகளிலும் நான் கண்ட பிரத்தியேகத் தன்மை இது. ஆலைகள், கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றிலெல்லாம் மற்றவர் களுக்கு எடுத்துக்காட்டாக செயல் புரிபவர்களின் படங்களை முன் வரிசையிலேயே பார்க்க முடியும். மனிதனின் உழைப்பிற்கும், திறமைக்கும் வெகுமதியளிக்கும் இந்த முறை என்னை மிகவும் கவர்ந்தது. உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கிச் சுரண்டிக்கொழுக்கும் பகா சூரர்களின் படங்களை ஆலைகளில் முக்கிய இடங்களில் மாட்டியிருப்பதைக் கண்டிருக்கி றேன். ஆனால் உழைப்பாளி வெகு ஜனங் களுக்குத் தொழிலில் உணர்ச்சியூட்டும் இந்த முறை சோஷலிஸ்டு நாடுகளில் தவிர வெறெங் கும் நான் கண்டதே கிடையாது.

நான் மாஸ்கோவிற்குத் திரும்பினேன். தாய கத்திற்குத் திரும்புவது உடனடிக் கடமையாகி விட்டது. டாக்டர்கள் என்னை பரிசோதித்தனர். பூரண திருப்தி அவர்களுக்கு ஏற்படாவிடனும், நான் போவதற்குச் சம்மதம் தந்தனர். ஆனால் விமானத்தில் பிரயாணம் செய்யக்கூடாதென்று யோசனை கூறினர். ரெயில் வழியாகச் சீனா விற்குப் போகலாம் என்றனர். ஒரு பிரத்தியேக ரெயில்வண்டியில் ஒரு டாக்டருடனும் இரு உதவியாளர்களுடனும் நான் கிளம்பினேன். ரெயில் பிரயாணம் மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. ருஷ்யாவைப் போன்ற, வேறுபட்ட ஜனப் பகுதிகளும், இயற்கை அமைப்புகளும் நிறைந்த ஒரு பெரிய நாட்டில் ரெயிலில் பிரயாணம் செய்வது உல்லாசமாகவும் பய னளிப்பதாகவும் இருந்தது. ஒவ்வொரு நிலையத் திலும் வண்டி நிற்கும் பொழுது மாறுபட்ட மொழியைப் பேசுபவர்களையும், மாறுபட்ட உடை அணிந்திருப்பவர்களையும் பார்க்கலாம். மாறுபட்ட, இயற்கைத் தோற்றம், காலநிலை ஆகியவை குதூகலமளிக்கின்றன. பத்துநாள் பிரயாணத்தின் முடிவில் சீனாவின் எல்லையை அடைந்துவிட்டோம். அங்கு சீனத் தோழர்கள் எங்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

டாக்டரும் உதவியாளர்களும் திரும்பிச் சென்றார்கள். நான் அவர்களுக்கு நன்றி தெரி வித்தேன், சீனத் தோழர்களுடன் பிரயாணத்தை மேற்கொண்டேன். உண்மையைக் கூறிடில் ருஷ்ய எல்லையைத் தாண்டியபொழுது நான் கவலை யடைந்தேன். சொந்த நண்பர்களிடமிருந்தும் உற்றார் உறவினர்களிடமிருந்தம் விடைபெற்றுச் செல்வது போல் எனக்குப்பட்டது. இந்த எட்டு மாத காலத்தில் அந்த அளவு பாசமும் நேசமும் அவர்கள் என்மீது செலுத்தினர். இந்தியாவின் பால் அவர்கள் கொண்டுள்ள பாசம் எல்லை யற்றது. எனக்கு நோய் அதிகரித்தபொழுது அவர் கள் காட்டிய கவலையும் உணர்ச்சியும்தான் என்னே! மனித வாழ்வினை இந்த அளவு விலை மதிப்பவர்களும் உண்டா என்று என் இதயம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

சீனத் தோழர்களுடன் நான் பீக்கிங்கை அடைந்தேன். அங்கு மூன்று நான்கு நாட்கள் தங்கினேன். அங்கு நான் தங்கியிருந்தபொழுது புகழ்பெற்ற மே தின அணிவகுப்பைப் பார்வை யிட்டேன். குறைந்ததொரு கால கட்டத்திற்குள் எல்லா துறைகளிலும் பெரும் அபிவிருத்தியைக் கண்ட, உணர்ச்சியும் உற்சாகமும் கொண்ட, அந்நாட்டின் லட்சக்கணக்கான தொழிலாளி-விவசாயி-மாணவ வீரர்களை நான் கண்டேன். அந்த மனித மகா சமுத்திரம் ஆனந்தத்தின் எல்லைகள் அனைத்தையும் தாண்டிக் குதித்து முன்னேறுவதைக் கண்டேன். சீனம் அன்று பல அரங்கங்களிலும், குழந்தை நடையைத்தான் போட்டுக்கொண்டிருந்தது. ஆனால், அன்றே தன்நிறைவும் எதிர்கால நம்பிக்கையும் உள்ள தோர் ஜனப்பகுதியை என்னால் பார்க்க முடிந்தது. சீனத்தின் வெற்றியின் பெரும் இரகசிய மென்னவென்றால் எதிர்கால நம்பிக்கை கொண்ட ஒரு ஜன சமூகத்தை அதனால் படைத் தெடுக்க முடிந்தது என்பதேயாகும்.

நான் சீனாவிலிருந்து ரெயில் வழியாக ஹாங் காங்கிற்குச் சென்றேன். அங்கிருந்து விமானத்தில்



படிப்பகம்

www.padippakam.com

டில்லிக்குப் பறந்தேன். இவ்வாறு எட்டு மாதம் நீடித்த எனது அயல்நாட்டுச் சுற்றுப்பிரயாணம் முடிவுற்றது.

### ஒரு புதிய உணர்வு புதிய பார்வை

நான் இங்கு இல்லாமலிருந்தபொழுது ருசிகரமான பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வேண்டுமென்றே முதல்தரமான கட்டுக்கதைகளை எதிராளிகள் புனைந்து பிரச்சாரம் செய்தனர். நான் ஸ்டாலினைப் பின்பற்றுபவன் அல்ல. ஸ்டாலின் கொள்கையை எதிர்ப்பவன், ஆகவே என்னை ருஷ்யாவிற்கு அழைத்துச் சென்று 'லிக்விடேட்' செய்துவிட்டனர். இது ஒரு மாதிரிக் கதை. பிற்போக்குப் பத்திரிகைகள்கூட என் மீது அளவு கடந்த அன்பைச் செலுத்தின. நாடாளுமன்றத்தில்கூட இந்தப் பிரச்சனை எழுப்பப்பட்டது. வடிகட்டின கம்யூனிஸ்டு எதிர்ப்பாளர்கள்கூட, கோபாலன் ஒரு நல்ல மனிதனென்றும், அவருக்கு என்ன நேர்ந்துவிட்டது என்பதைத் தெரிய வேண்டுமென்றும், நாடாளுமன்றத்தில் கூக்குரல் எழுப்பினர். அது நெறியின்றி பொய்க் கதைகளைப் புனைவதன் துவக்கமாகவே இருந்தது. இதைவிட ஏளனத்திற்குரிய பண்பாடற்ற எவ்வளவோ புனைச் சுருட்டுகளை கம்யூனிஸ்டு கட்சிக்கு எதிராக அவர்கள் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றனர். அவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இந்தப் பிரச்சாரம் மிகவும் சிறு பிள்ளைத்தனமாக இருந்தது எனலாம்.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில் அந்தக் காலகட்டம் முக்கியமான பல படிப்பினைகள் கொண்டதாக இருந்தது. 1948-60 வருடங்களில் கட்சிக்குப் பல குறைபாடுகள் இருந்தன. அது பல தவறுகளை இழைத்திருக்கிறது. சரியானவை பலவற்றையும் அது செய்திருக்கிறது. இந்த குண தோஷங்களைப் புரிந்து கொண்டு ஒரு புதுப்பாதையில் அது பிரயாணம் செய்யத் தொடங்கியிருந்தது. 1948-50 வருடங்களில் இந்திய மக்களின் உடனடித் தேவைகளுக்குப் பரிகாரம் காண்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவும், மக்களுடன் ஒன்றிணைந்து நிற்கவும் கட்சி தயங்கவில்லை. அதனால்தான், ஏராளமான தவறுகளைச் செய்தபோதிலும், எல்லாவிதமான அடக்குமுறைகளும் ஒன்றிணைந்து கட்சியின் மீது ஏவிவிடப்பட்ட போதிலும் அவை அனைத்தையும் சமாளித்துக் கொண்டு, கேரளம், ஆந்திரம், தமிழகம் முதலிய மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஏராளமான கம்யூனிஸ்டு தலைவர்களும் தோழர்களும் வெற்றிவாகை சூடினர். ஒரு புதிய பொறுப்பு கட்சி மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இதை எவ்வாறு செயலில் கொண்டுவருவது? இந்தப் பாதையில் முன் செல்வது பலனளிக்கக்



கூடியதுதானா? இவ்வாறான விவாதங்கள் நாடு பூராவிலும் கட்சிக்குள் நடைபெற்று வந்தன. கடுமையான கருத்து வேற்றுமைகள் தலைதூக்கின. புதிய நிலைமைகளையும், சூழ்நிலைமைகளையும் மதிப்பீடு செய்து தெளிவான பாதையை உருவாக்க வேண்டிய அவசியம் மேற்பட்டது. அதையொட்டி, கட்சியின் மூன்றாவது காங்கிரஸ் மதுரையில் நடைபெற்றது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான தோழர்கள் அதில் பங்கு கொண்டனர். உயிருள்ள விவாதங்கள் நடைபெற்றன. சில தெளிவான முடிவுகளுடன் கட்சிக் காங்கிரஸ் முற்றுப்பெற்றது. கொள்கைக் குழப்பத்தில் ஆழ்ந்து நின்ற தோழர்களை முன்னேறிச் சென்று செயலாற்ற அந்தக் காங்கிரஸ்தான் கொள்கைத் தெளிவைக் கொடுத்தது. இந்தியா முழுவதுமுள்ள இடதுசாரி சக்திகளை ஒன்று திரட்டவும், ஆளும் கட்சியான தேசியக் காங்கிரசிற்கெதிராக இடதுசாரி ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் இந்தக் காங்கிரஸ் முடிவெடுத்தது. ஒரு புதிய சிந்தனைப் போக்கு, செயல்முறை ஆகியவற்றின் வெற்றிகரமான துவக்கமாக விளங்கியது மதுரைக்காங்கிரஸ்.

மதுரைக் காங்கிரஸ் முடிந்து சில நாட்களுக்குள் திரு-கொச்சியில் ஓர் மந்திரி சபை நெருக்கடி வளர்ந்து வந்தது. தேசியக் காங்கிர



படிப்பகம்

www.padippakam.com

சுக்குள் பிளவு தலைதூக்கிற்று. இதர கட்சிகளிலிருந்து எந்தவிதமான நிர்ப்பந்தமின்றியே அந்த மந்திரிசபை தகர்ந்து விட்டது. ஜனநாயகத்தின் பெருமையைப் பற்றித் தேவைப்படும் பொழுதும் அல்லாமலும் கூக்குரலிடும் காங்கிரசின் முதலமைச்சர் சாட்சாத் பனம்பள்ளி கோவிந்த மேனன் ராஜினாமா செய்த போதிலும், 'ஐவர் ஜன்னிங்'ஸின் நூல்களை ஆதாரம் காட்டி 'காவல் மந்திரி சபை' (கேர்டேக்கர்)யாக ஆட்சி நடத்தினார். கம்யூனிஸ்டு, பிரஜா சோஷலிஸ்டு, புரட்சி சோஷலிஸ்டு ஆகிய எதிர்க்கட்சியினருக்கு மந்திரி சபையை அமைக்க ஒரு சந்தர்ப்பத்தைக் கூடக் கொடுக்காமல் இந்நிலைமையை அவர்கள் கையாண்டனர். எப்படியும் ஆட்சியில் ஒட்டிக்கொண்டு, நடைபெறவிருக்கும் தேர்தலில் அரசாங்க இயந்திரத்தைப் பயன்படுத்தி, தாங்கள் வெற்றிபெற வேண்டுமென்ற நோக்கத்துடன் செய்த தந்திரம் இது. இந்த அப்பட்டமான, ஜ்னநாயகப் பண்புகளுக்கு விரோதமான நடவடிக்கையை மத்திய அரசாங்கம் கண்மூடி ஏற்றுக்கொண்டது. நாங்கள் இந்தப் பிரச்சினையைப் நாடாளுமன்றத்தில் எழுப்பிய பொழுது இது அந்த ராஜ்ஜியத்தின் உள்விவகாரமென்று சொல்லி மத்திய உள்துறை மந்திரி நழுவிக்கொண்டார். எனினும் அங்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் பிரஜா சோஷலிஸ்டு, புரட்சி சோஷலிஸ்டு, கேரளா சோஷலிஸ்டு ஆகிய கட்சிகளுட;ன சில உடன்பாடுகளைச் செய்துகொண்டு கம்யூனிஸ்டு கட்சி போட்டியிட்டது. இடதுசாரி கட்சிகளின் இந்த ஒற்றுமையை மக்கள் வரவேற்றனர். ஆனால், கேரளாவிலுள்ள ஜனநாயகஇயக்கங்களின் துரதிஷ்டம் என்று சொல்லக்கூடிய முறையில் பிரஜா சோஷலிஸ்டு கட்சி என்றும்போல் துரோகத்தனமான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்தது. ஒன்றுபட்டு நின்று வெற்றிபெற்றால் ஒன்று சேர்ந்து ஆட்சியை நடத்துவோம் என்று தேர்தல் காலத்தில் வாக்குறுதி கூறிய பிரஜா சோஷலிஸ்டு கட்சி, காங்கிரசுடன் ஒன்று சேர்ந்து ஒரு மந்திரி சபையை அமைத்தது. ஆனால் இந்த ஒற்றுமை அதிக நாட்கள் நீடித்து நிற்கவில்லை. ஆதரவளித்துத் தாங்கி நிற்கும் ஒரு எதிர்க்கட்சியாகக் காங்கிரஸ் செயலாற்றியது. பிரஜா சோஷலிஸ்டு மந்திரிசபை ஒரு நிலச்சீர்திருத்த மசோதாவைக் கொண்டு வரமுயன்றது. காங்கிரஸ் கட்சி, வெட்கமின்றி, அது வரை ஆதரவளித்து வந்த மந்திரிசபையைக் கவிழ்த்து விட்டு "திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசு"டன் ஒன்றுபட்டு தனிக் காங்கிரஸ் மந்திரிசபையை அமைத்துக்கொண்டது. பிரஜா சோஷலிஸ்டு மந்திரிசபையின் ஆட்சிக் காலத்தில் தான் புகழ் மிக்க ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் தொழிலாளிகளின் போராட்டமும் தமிழ் மக்கள் குடியிருக்கும் பிரதேசங்களைத் தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் மென்பதற்காக நடைபெற்றன. அவ்வாறு பிரஜா சோஷலிஸ்டு மந்திரிசபையை மக்களிடமிருந்து தனிமைப்படுத்திய பிறகு தான் காங்கிரஸ் கட்சி அதை கீழே தள்ளி விட்டது.

மொழிவாரியாக மாகாணங்களையும் பிரிக்க வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்கெனவே உருப்பெற்றிருந்தது. திரு. பொட்டி ஸ்ரீராமுலு ஆந்திர மாகாணம் தனியாக அமைக்க வேண்டுமென்பதற்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். காங்கிரஸ் கட்சிக்காக வாழ்நாள் பூராவும் செயலாற்றிய அந்த வீர தேசபக்தனின் மரணத்தினால் மட்டும்தான் காங்கிரஸின் கண்களைத் திறக்க வைக்க முடிந்தது. ஆந்திரப் பிரதேசம் அமைக்கப்பட்டது. ஆனால் அத்துடன் விசாலாந்திரா, கேரளா முதலிய மொழிவாரி மாகாணப் பிரிவினை வேண்டுமென்ற கிளர்ச்சி இந்தியாவில் வளர்ந்து வலிமை பெற்றது. இந்தப் பிரச்சனை நன்கு கற்றுத்தெரிந்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க ஒரு கமிஷனை அமைப்போம் என்று நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி அறிவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து பல்வேறு ஜனப் பகுதிகள் நடத்தும் கிளர்ச்சிகளிலும் போராட்டங்களிலும் பங்கெடுக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

புதிதாக அமைக்கப்பட்ட ஆந்திரப்பிரதேசத்தில் கால தாமதமின்றியே தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி தனிமையாக நின்று போட்டிபோட்டது. திரு - கொச்சியில் கிடைத்த படிப்பினைகளின் கசப்பான அனுபவம்தான் பிரஜா சோஷலிஸ்டு கட்சியுடன் கூட்டுசேரக் கம்யூனிஸ்டு கட்சியைத் தடுத்தது என்று சொன்னால் அது சரியாகும். ஒவ்வொரு கட்சியும் வெற்றிபெற மிகப் பிடிவாதமுடன் போராடிற்று. கம்யூனிஸ்டு கட்சி அனேகமாக எல்லா தொகுதிகளிலும் அதன் வேட்பாளர்களை நிறுத்தி போட்டியிட்டது. இந்தத் தேர்தலின்பொழுது நான் ஆந்திரப்பிரதேசம் முழுவதிலும் சுற்றுப்பிரயாணம் செய்து பொதுக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றிவந்தேன். பத்தாயிரக்கணக்கில் விவசாயிகளும் வெகு ஜனங்களும் அந்தக் கூட்டங்களில் பங்கெடுத்து வந்தனர். ஆவேசத்தின் அலை மோதலை அங்கு எங்கும் பார்க்க முடியாதது. கட்சி பெருவாரியான இடங்களில் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை மேலோங்கி வந்தது. ஆனால் தேர்தல் முடிவுகள் சோர்வைத் தந்தன. கட்சிக்கு வாக்குகள் அதிகரித்துவிட்டன. ஸ்தானங்கள் மிகக்



படிப்பகம்

www.padippakam.com

குறைந்தன. கட்சிக்கு விவசாயிகளையும் சாதாரண பொதுமக்களையும் தேர்தல் போராட்டத்தில் அணிவகுக்கச் செய்ய முடிந்தபோதிலும், மத்தியதர வர்க்கப் பகுதி மக்களிடம் ஆழ்ந்து செல்ல முடியவில்லை. கொள்கைக் குழப்பத்தையும் தெளிவின்மையினையும் அவர்களிடம் புகுத்த ஆளும் கட்சிக்கு முடிந்தது. நேருஜியையும் இந்தியாவையும் பற்றிய "பிராவ்தா"வின் கட்டுரைகளைக் கூட ஆளும் கட்சி அச்சிட்டு துண்டுப் பிரசுரங்களாக விநியோகம் செய்தது. ஆளும் கட்சியின் பயமுறுத்தல்களையும் ஆசை வார்த்தைகளையும் கட்சியால் சமாளிக்க முடியவில்லை. தோல்விக்குப் பாதையை வகுத்த காரணங்களில் அத்துமீறிய ஆத்ம நம்பிக்கையும் ஒன்றாகும் என்று சொன்னால் அதில் தவறு இல்லை.

1955ல் (கேரளத்தில்) திரும்பவும் காங்கிரஸ் மந்திரி சபை கவிழ்ந்தது. காங்கிரஸ் கட்சிக்குள் ஒருவருக்கொருவர் காலை வாரிவிட்டதன் விளைவாகத்தான் அவ்வாறு நேர்ந்தது. கம்யூனிஸ்டு கட்சியும் இதர எதிர்க்கட்சிகளும் சேர்ந்து மந்திரிசபையை அமைக்க முன்வந்தன. பெருவாரியான சட்டசபை உறுப்பினர்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை தோழர் டி.வி. தாமஸ் ராசப்பிரமுகரிடம் ஒப்படைத்தார். ஆயினும் எதிர்க்கட்சித் தலைவர் தாமஸை மந்திரிசபையை அமைக்க ராஜப்பிரமுகர் அழைக்கவில்லை. இத்துடன் ஜனாதிபதியின் ஆட்சி அமலுக்கு வந்தது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் ஐக்கிய கேரளத்திற்கான கிளர்ச்சி வலுப்பெற்றது. முற்போக்கு சக்திகளின் கைகளில் கேரளாவின் ஆட்சிப் பொறுப்பு வந்துவிடும் என்ற கருத்து, பிற்போக்காளர்களைத் "தட்சிணப்பிரதேச" வாதத்திற்கு அழைத்துச் சென்றது. அதே கருத்து காங்கிரஸ் கட்சிக்குள் கணிசமான பகுதியினரைக் கூட இழுத்துச் சென்றது. கேரளம், தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்களை ஒன்றுசேர்த்து பெரியதோர் தென் மாநிலத்தை அமைக்க அவர்கள் பெரும் முயற்சி செய்தார்கள். ஆனால் இந்த தென்மாநிலவாதிகள் மக்கள் மகாப்பிரவாகத்தைக் கண்டு நடுங்கினர். அதனால்தான் இந்த மாநிலங்களின் ஆட்சியாளர்களால் ஒருமித்த கருத்துக்கு வர முடியவில்லை. குறிப்பாக திரு. காமராஜருக்கு இதைப்பற்றி பகிரங்கமாகத் தன் கருத்தை தெரிவிக்க தைரியமேற்படவில்லை. இந்தத் தென் மாநிலவாதம் வெளிக் கிளம்பியதும் கேரளத்திற்குள்ளேயும் வெளியிலும் ஐக்கிய கேரளக் கிளர்ச்சி வலுப்பெற்றது. என்றும்போல் இதர மாநிலங்களிலுள்ள மலையாளிகள் இந்தக் கிளர்ச்சியில் சிறந்த பங்கை ஆற்றினர். இது மிகைப்படுத்திக் கூறுவது அல்ல. பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் ஐக்கிய கேரள மாநாடுகள் கூட நடைபெற்றன. என்னைப் பொறுத்தவரையில் மற்ற மாநில மலையாளிகளுடன் அதிகமான தொடர்பை ஏற்படுத்த முடிந்த ஒருவன்தான் காங்கிரஸ் காரன், சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு ஆகிய எல்லா முறைகளிலும் நான் அவர்களை அணுகியிருக்கிறேன். அந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் கேரள மக்களின் இயக்கங்களுக்கு இதய பூர்வமாக நன்கொடைகளை அவர்கள் அள்ளி அள்ளித் தந்திருக்கிறார்கள். பணமாகவும் பொருள்களாகவும் தந்திருக்கிறார்கள். இலங்கை, பம்பாய், கல்கத்தா, சென்னை, அகமதாபாத், பூனா ஆகிய இடங்களில் குடியிருக்கும் மலையாளிகள் அளித்துள்ள உதவிகள் கொஞ்ச நஞ்சமன்று. எனக்கு மட்டுமல்ல, எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அவர்கள் உதவியிருக்கிறார்கள். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பாராமல் நாட்டின் பொது நலனை மனதிலிருத்திக்கொண்டு அவர்களுக்கெல்லாம் உதவிக்கரங்களை நீட்டியிருக்கிறார்கள், இந்த மலையாளித் தோழர்கள். ஒரு மலையாளி அவன் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் அங்குள்ள முற்போக்கு இயக்கத்துடன் இணைந்து விடுவான் என்பது என்னை என்றென்றும் பெருமிதமடையச் செய்திருக்கிறது. அவன் தனது தாயகத்தையும் பண்பினையும் பற்றிப் பெருமையுடன் பேசுவான். முடிந்த அளவு எந்த உதவியையும் தன் நாட்டிற்காகச் செய்யச் சித்தமாயிருப்பான். அந்நிலைமை இன்னமும் தொடர்ந்துகொண்டேயிருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

மற்ற மாநில மலையாளிகளின் இந்த நாட்டுப் பற்றுதல் ஐக்கிய கேரளத்தை உருவாக்கும் பிரச்சனையில் மிகப்பெரியதோர் பங்கினை ஆற்றியிருக்கிறது. கேரளத்திற்கு என்றென்றும் இவர்கள் உற்ற துணைவர்களாக இருப்பார்கள் என்று கணக்கிடுவதில் தவறு ஏற்படாது என்றே சொல்லலாம்.

மாகாணப் புனரமைப்புக் குழுவினர் கேரளத்தில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது மலையாளக் கரையில் எங்கும் மாபெரும் ஆர்ப்பாட்டங்களும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன. குழுவினர் பல்வேறு இடங்களைச் சந்தித்து புள்ளி விபரக் கணக்குகளை எடுத்தனர். மக்கள் பிரதிநிதிகளுடன் விவாதித்தனர். மக்களை நேரடியாக விசாரிக்கவும் செய்தனர். இந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் மாபெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்த ஆர்ப்பாட்டங்கள் பிற்போக்கு சக்திகளுக்குக் கடிவாளமிட்டன.


*நான் என்றும் மக்கள் ஊழியனே என்ற புத்தகத்திலிருந்து*



படிப்பகம்

www.padippakam.com

# "மகாத்மாவும் - அவரது இசமும்" நூலில் தோழர் இ. எம்.எஸ்.



### காந்தியிசத்தின் வெற்றி எது? தோல்வி எது?


காந்தியின் தலைமையில் சுதந்திரத்தை வென்றுவிட்டோம் என்று கோடிக்கணக்கானவர்கள் மகிழ்ந்த தருணம் அது.ஆனால் காந்தியோ, மனிதர்களின் நல்லியல்புகளைப் புத்துயிர்ப்பு செய்வதென்ற தனது லட்சியம் தோற்று விட்டது .என்று கருத்து தெரிவித்தார். பிரிட்டிஷ்காரர் களுக்கு எதிரான போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் உத்தியாகவும், தந்திர மாகவும் காந்தியிசம் வெற்றி பெற்றது. ஆனால் மனித இயல்பு களைப் புத்துயிர் பெறச் செய்யும் புதிய முறை, புதிய சமூகச் சித்தாந்தம் என்கிற வகையில் காந்தியிசம் முழுத் தோல் வியைக் கண்டது என்பதற்கு அவரது வார்த்தைகளை விட தெளிவான தீர்ப்பு வேறு இருக்க முடியாது"

*- பக்கம் 138*

### எப்படி மதிப்பிடுவது காந்தியை?

"இது சுலபமான பணி அல்ல. மற்ற பல வரலாற்று நாயகர்களைப் போன்றே காந்தியும் மிகச் சிக்கலான ஆளுமை கொண்டவர். 'தேசிய இயக்கத்திற்கு உத்வேகம் தந்து ஏகாதி பத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளில் மக்களை எழுச்சி கொள்ளச் செய்தவர்' என்றோ அல்லது 'தேசிய இயக்கம் புரட்சிகரப் பாதையில் வளர்வதைத் தடுக்க தன்னால் இயன்ற அனைத்தையும் செய்த எதிர்ப் புரட்சிக் காரர்' என்றோ மிக எளிதாக அவரைப் பற்றிய மதிப்பீடிற்கு வந்துவிட இயலாது"

*- பக்கம் 140*



"பிற்போக்கான சமூகக் கண்ணோட்டம் கொண்ட காந்தியே நவீன தேசிய ஜனநாயக இயக்கத்திற்கு பெருந்திரளான. கிராமப்புற ஏழை மக்களை ஈர்த்த புரட்சிகர, அற்புதமான காரண கர்த்தா என்று எவரேனும் கூறினால் அது அவரின் சுய முரண்பாடு போல் தோன்றலாம். ஆனால் இச் சுயமுரண்பாடு , தேசிய ஜனநாயக இயக்கத்திற்கு தலைமை தாங்கிய முதலாளித் துவ வர்க்கம் நிலபிரபுத்துவத்துடன் கொண்டிருந்த தொடர்பு எனும் நிஜ அரசியல் வாழ்வில் இருந்த முரண்பாட்டின் வெளிப் பாடே".

*- பக்கம் 142*

### காந்தியின் உண்மை, அறம், அகிம்சை பரிபூரணமானவையா ?

முதல் உலக யுத்தத்தில் பங்கேற்பதை பாவம் என்று காந்தி கண்டிக்கத் தவறியது ஏன்? மேலும் குஜராத் மாகாணத்தில்



படிப்பகம்

www.padippakam.com

*பிரிட்டிஷ் ராணுவத்திற்கு ஆளெடுக்கும் அளவிற்கு ஆதரவாகச் செயல்பட்டது ஏன்? இரண்டாம் உலக யுத்தத்தில் எல்லாச் சாத்தியமான வழிகளில் இருந்தும் ஒதுங்கியதோடு,அதைப் பாவம் என்று சொன்னது ஏன்? முதல் உலக யுத்தம் ஒழுக்க மாகவும், இரண்டாவது உலக யுத்தம் பாவமாகவும் மாறியது எப்படி? 1921 ல் சைத்தான் என்று அரசாங்கத்தை அழைத்தவர், சட்டசபைகளைப் புறக்கணிக்க வேண்டும் என்றவர் பின்னர் சுயராஜ்யவாதிகளை சட்டசபைகளில் அனுமதிக்க- மாற்றுக் கருத்துள்ளவர்களைச் சம்மதிக்கச்செய்ய- தனது செல்வாக்கை பயன்படுத்தியது ஏன்? சௌரி சௌராவில் மக்கள் வன்முறையில் ஈடுபட்டதும் ஒத்துழையாமை உள்ளிட்ட போராட்டங் களைத் திரும்பப் பெற்றவர், மாகாண காங்கிரஸ் அரசாங்கங்கள் போராடும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியபோது அவற்றை ஆதரிக்கத் தயங்காதது ஏன்? ... மற்ற எந்த மனிதரையும் போல காந்திக்கும் உண்மை, அறம், அகிம்சை போன்றவை பரிபூர்ணமானவை அல்ல, மாறாக சார்புத் தன்மை கொண்டவையே "*
*- பக்கம் 150*

### காந்தி எப்படி முதலாளித்துவ வர்க்கத்தின் தலைவராக ஆரவாரமாக ஆமோதிக்கப்பட்டார்?

*"முதலாளி வர்க்கத்தின் தேவைகளுக்கு ஏற்ப உண்மை, அறம், அகிம்சை போன்ற கோட்பாடுகளை அவர் பிரயோகப்படுத்தியதால்தான் அவர்களை ஒன்றுபடுத்தும் ஆற்றல் காந்திக்கு கைவசமானது. உழைப்பாளி மக்களை கட்டவிழ்த்து விட்டதிலும், பிரிட்டிசாருக்கு எதிராக அவர்களை ஒன்றுபடுத்தியதிலும், அதே நேரத்தில் அவர்களின் செயல்பாடுகளை முதலாளித்துவ வர்க்கத்தின் பாதுகாப்பு எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தியதிலும் காந்திக்கு இருந்த திறமை அவ்வர்க்கத் தால் பாராட்டப்பட்டது... காந்தி மக்களின் நாடித் துடிப்பை அறிந்திருந்தார். ஏகாதிபத்திய எதிர்ப்புத் தீயை அணையாமல் பார்த்துக் கொண்டார்.ஆனால் மககள் களத்தில் இறங்கும்போது அந்த தீ தங்களையும் விழுங்கிவிடுமே என்று அஞ்சியவர்களையும் அத் தணல் அண்டாமல் பார்த்துக் கொண் டார். உண்மை, அறம், அகிம்சை போன்ற கோட்பாடுகள் இப்படி நேர்த்தியாக பிரயோகிக்கப்பட்ட விதத்தினால்தான் முதலாளிகளின் பிரதிநிதிகள் அவரை தங்களின் தலைவர் என ஆரவாரமாக ஆமோதித்தனர்".*
*- பக்கம் 151*

### சுரண்டும் வர்க்கங்கள் வினோபா பாவே போன்றவர்களை வாழ்த்துவது ஏன்?

*மார்க்சிய மூலவர்கள் ஒரு நூற்றாண்டிற்கு முன்பே பிரகடனம் செய்தார்கள். எந்த வர்க்கமும் தனது அரசியல் அதிகாரத்தை தானே விட்டுக் கொடுக்க முன் வருவதில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாக தனிநபர்கள்,வினோபாவே போன்ற லட்சிய வாதிகளின் போதனைகளைக் கேட்டு அதிகாரத்தையோ, உடைமையையோ துறக்கலாம். ஆனால் முதலாளிகளோ, நிலப் பிரபுக்களோ, இதர சுரண்டும் வர்க்கங்களோ ஒரு வர்க்கம் என்ற வகையில் சமூக மாற்றத்துக்கு விருப்பத்தோடு இசைய மாட்டார்கள். ஆதலால் வினோபா பாவே மற்றும் அவரின் சகாக்களை இச் சுரண்டும் வர்க்கங்கள் நிச்சயமாய் வாழ்த்துவார்கள். பூதான இயக்கத்தின் பிரச்சாரத்திற்கு தங்கள் அதிகாரத்திற்கு உட்பட்டு உதவவும் செய்வார்கள்"*
*- பக்கம் 156*

### மார்க்சிய, லெனினிய மதிப்பீடு என்ன ?

*"காந்தியத்தை மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படையில் மதிப்பிடும்போது முதலாளித்துவ தத்துவம், நடைமுறை என்ற வகையில் அதன் சாதக, பாதகங்களை கணக்கிற் கொள்ளவேண்டும். சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, பூமிதான இயக்கத்தின்போது நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு, 1970 களில் சர்வாதிகார எதிர்ப்பு என தேச சுதந்திரம், விவசாய சீர்திருத்தங்கள், ஜனநாயகப் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக காந்தியம்போராடியுள்ளது. அதே நேரத்தில் அதன் இருண்மைவாத சமூகக் கலாசாரக் கண்ணோட்டத்தின் காரணமாக மககள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு தடையாகவும் அது மாறியது... காந்தியத்திற்கு எதிரான கொள்கைரீதியான தத்துவார்த்த ரீதியான போராட்டங்களைத் தொடர்ந்து நடத்த வேண்டும் ".*


*தொகுப்பு: சாமிநாதன்*



படிப்பகம்

www.padippakam.com

# கார்ல் மார்க்ஸ் நினைவு தினம் - மார்ச் 14



பிரிட்டிஷாரால் இந்தியா மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள கொடுமைஎன்பது இதுவரை இந்தியா சந்தித்த துன்ப துயரங் களையெல்லாம் விட அடிப்படையில் வேறுபட்டதும் மிகக் கூடுதல் கடுமையானதும் ஆகும்.. இந்திய சமூகத்தின் முழு கட்டமைப்பையும் இங்கிலாந்து தகர்த்துவிட்டது. கட்டமைப்பின் மறு உருவாக்கத்திற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. பழைய உலகம் அழிக்கப்பட்டு எந்த ஒரு புதிய உலகமும்கிடைக்க வில்லை என்ற நிலை இந்திய மக்களுக்கு பெரும் சோகமாய் அமைந் துள்ளது. பிரிட்டனால் ஆளப்படும் இந்தியா தனது பெரும் பழமை வாய்ந்த பாரம்பரியத்திலிருந்தும் தனது முழு வரலாற்றிலிருந்தும் துண்டிக்கப்பட்டு நிற்கிறது. (இந்தியாவில்பிரிட்டிஷ் ஆட்சி பற்றி மாமேதை கார்ல் மார்க்ஸ்)

*1853ம்ஆண்டு நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூன் என்ற அமெரிக்க பத்திரிகையின் ஜூன் 25ஆம் தேதி இதழில் எழுதிய*

*இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி என்ற கட்டுரையிலிருந்து.*

ஆங்கிலேய மில் முதலாளிகள் பருத்தியையும் உற்பத்திக்குத் தேவையானஇதர மூலப்பொருட்களையும் மலிவாக எடுத்து செல்லுவது என்ற ஒரே நோக்கத்திற்காகவே அங்கு இரயில் பாதைகளை அமைக்க உள்ளனர் என்பதை நான் அறிவேன். ஆனால், நிலக்கரியும் இரும்புத்தாதுவும்உள்ள ஒரு நாட்டில் போக்குவரத்துக்கான இயந்திரங்களைப் புகுத்திவிட்டால் அவற்றை வடிவமைக்கும்திறனை அந்நாடு பெறாமல் தடுக்க முடி யாது. இத்தகைய விரிந்து பரந்த நாட்டிலே இரயில் போக்கு வரத்தைபராமரித்திட அதற்கு உடனடித் தேவையான தொழில் சார் செயல்முறைகளை அறிமுகம் செய்யாமல் முடியாது. காலப் போக்கில், இரயில் துறையுடன் தொடர்பில்லாத தொழில் துறைகளிலும் இவ்வியந்திரங்கள்பயன்படுவதை தவிர்க்க முடி யாது. ஆகவே இந்தியாவில் இரயில்வே தொழில் நவீன தொழில் வளர்ச்சிக்குமுன்னோடியாக அமையும். இந்தியாவின் வளர்ச் சிக்கும் ஆற்றலுக்கும் தீர்மானகரமான தடையாகஉள்ள சாதி அமைப்பிற்கு அடித்தளமாக உள்ள பிறப்புசார் உழைப்பு பிரி வினையை இரயில்வேயின்தொடர்ச்சியாக உருவாகும் நவீன தொழில்வளர்ச்சி (காலப்போக்கில்) கரைத்து விடும்.

(ஆனால்)

பிரிட்டனில் ஆளும் வர்க்கங்கள் தொழிலாளி வர்க்கத்தால் தூக்கிஎறியப்பட்டோ அல்லது இந்திய மக்கள் வலுப்பெற்று ஆங்கிலேயச்சங்கிலிகளை தகர்த்து தூக்கிஎறிந்தாலோ அன்றி பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் இந்திய மக்கள் மத்தியில் தூவி விட்டுள்ள நவீன அம்சங்களின் பலன்களை இந்திய மக்கள் அனுபவிக்க முடியாது.

*நியூயார்க் டெய்லி டிரிப்யூன் என்ற ஆங்கில ஏட்டின்*

*ஆகஸ்ட் 9, 1853 தின இதழில்*

*மாமேதை கார்ல் மார்க்ஸ் எழுதிய*

*இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்கால விளைவுகள் என்ற கட்டுரையிலிருந்து*

**மார்க்சிய பதாகையை உயர்த்திப்பிடிப்போம்!**



படிப்பகம்

www.padippakam.com

# பசுமையான புதிய ஒப்பந்தம்

□ முனைவர் **தி. ராஜ்பிரவின்** □

உலகளவில் முதலாளித்துவம் மிகப்பெரிய அளவில் சரிவுகளை சந்தித்து வருகிறது. உலக வங்கி, சர்வதேச நீதி அமைப்புகள், அமெரிக்காவின் பொருளாதார அமைப்புகள் கடுமையான பொருளாதார முயற்சிகளை மேற்கொண்டும் நிலைமை கட்டுப்படுத்த அல்லது சரிவுகளை சீர் செய்ய முடியவில்லை. கடுமையான நிதிநிலை மானிய வெட்டுகள், நலத் திட்டங்கள் குறைப்பு, பொதுத்துறை நிறுவன விற்பனை, நிதி நிறுவனங்களில் புதிய முதலீடுகளுக்கு அனுமதி போன்ற முதலாளித்துவ பொருளாதார நடவடிக்கைகள் மேலும் சரிவுகளை அதிகரிக்கச் செய்கிறது. மேற்கத்திய நாடுகளை அதிகளவில் தாக்கிய பொருளாதார நிகழ்வுகள் மறைமுகமாகவும், நேரடியாகவும் நமது நாட்டையும் பாதித்து வருகிறது. உலக சந்தையின் தாக்கத்தை இந்தியாவும் சந்திக்க வேண்டிவரும் என்ற பொருளாதார நிபுணர்களின் கருத்துக்களில் இடதுசாரிகளின் வழிகாட்டலில் அல்லது நிர்பந்தம் காரணமாக மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் காரணமாகவே இன்றைய நமது நாட்டின் பொருளாதாரம் பாதுகாக்கப்பட்டது பற்றி குறிப்பிடாமல் மேலும் வீழ்ச்சியை பெருக செய்யும் புதிய பொருளாதார முயற்சிகளுக்கு அதிக அளவு முக்கியத்துவம் தரப்படுகிறது. தற்போதைய நடைமுறை சூழலில் இரண்டாம் உலகப்போர் முடிந்து ஒரு மிகப் பெரிய அளவிலான பொருளாதார சரிவுகள் முதலாளித்துவ நாடுகளை தாக்கியபோது புதிய ஒப்பந்தம் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் ஒரு மீட்சியை தந்தது ஒரு மறுக்க முடியாத உண்மை. இன்றைய நடைமுறை சூழலில் நமது நாட்டிலும் புதிய பொருளாதார நடவடிக்கையாக சில பொருளாதார நிபுணர்கள் பசுமையான புதிய ஒப்பந்தம் என்ற பொருளாதார சிந்தனை கருத்தாக்கத்தை உருவாக்கி வருகின்றனர். குறிப்பாக நமது பொருளாதார வளர்ச்சி குறைந்துவரும் சூழலில் நாட்டின் மொத்த உற்பத்தி மிகப்பெரிய அளவில் சரிந்துவரும் நிலையில், பணவீக்கம் ஒரு பெரிய சுமையாக உயர்ந்துவரும் நடைமுறையில், நமது நாட்டின் பணமதிப்பு சர்வதேச சந்தையில் டாலருக்கு எதிராக 20 சதவீதம் வரை வீழ்ச்சியைக் கண்டு வரும் நடைமுறையில். மும்பை பங்கு சந்தை வர்த்தகம் வருட அளவில் 27 சதவீதம் வரை முதலீடு இழப்புகளை சந்தித்து வரும் சூழலில் புதிய வரலாற்று சிறப்பைக் கொண்ட பொருளாதார பெயர்கள் சூட்டப்படும் பொருளாதார முயற்சிகள் அதிகளவு விளம்பரம் மற்றும் முக்கியத்துவம் பெறுகிறது.

தற்போதைய மத்திய அரசு மிக அதிக வட்டியில் (9 சதவீதம்) கடன் வாங்கிவரும் நடைமுறை சூழலில் பெரிய நிறுவனங்கள் 13 சதவீதம் என்ற அளவில் கடன் வாங்கி தொழில் நடத்தி வரும் சூழலில் நமது நாட்டில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் கணிசமான அளவில் குறைந்து வரும் நிலையில் மத்திய அரசு செயற்கையாக நிலைமையை சமாளிக்க வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் இந்தியா சந்தையில் நேரடியாக முதலீடுகள் செய்ய அனுமதி வழங்கி வருகிறது. மேலும் பொதுத்துறை மற்றும் தனியார் பெரு நிறுவனங்களை 50,000 கோடிகள் வரை கட்டமைப்பு கடன் பத்திரங்களில் முதலீடுகள் செய்யவும் பொருளாதார முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய நடைமுறை சூழலில் சூசன் ஜார்ஜ் அவர்களின் புதிய புத்தகமான "யாருடைய பிரச்சனை, யாருடைய எதிர்காலம்" முன் வைக்கப்பட்ட புதிய பசுமையான புதிய ஒப்பந்தம் என்ற பொருளாதார சிந்தனை, கோட்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. பொது மக்களின் நடைமுறைத் தேவைகளை உள்ளடக்கிய இப்பொருளாதார சிந்தனை மக்களின் அடிப்படைத் தேவைகள், உரிமை களைப் பெற்றுத்தர முயற்சிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. பாதுகாப்பான குடிநீர், உறைவிடம், 12 வயதுடைய அனைவருக்கும் கல்வி, சுகாதாரம், மின்சார வசதிகள், நவீன எரிபொருள் வசதி போன்ற வற்றை நிறைவு செயயும் பொருளாதார மீட்சி நடவடிக்கையாக காணப்பயிலும் உண்மையில் தற்போதைய பொருளாதார மற்றும் நிலப்பிரபுத்துவ கட்டமைப்பை பாதுகாக்கவே பெரிதும் முயற்சி செய்கிறது. குறிப்பாக இடதுசாரி இயக் கங்கள் முன்வைக்கும் நில சீர்திருத்தத்திற்கு மாற்றாக கூட்டுறவு விவசாயத்தை முன்வைக்கிறது. கடந்த பல வருடங்களாக இந்திய வேளாண்துறை மிகப்பெரிய அளவில் வீழ்ச்சிகளை சந்தித்து வரும் நடைமுறை சூழலில், சிறு மற்றும் குறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள்




படிப்பகம்

www.padippakam.com

தங்கள் நிலங்களை இழந்து விவசாயக் கூலித் தொழிலாளர்களாக உருவாகி வரும் நடைமுறை சூழலில் நிலத்தில் பாடுபடும் தொழிலாளர் வர்க்கத்திற்கு நிலவுரிமையை மீட்டு தராமல் கூட்டுறவு வேளாண்மை என்ற போர்வையில் முதலாளித்துவ முயற்சிகள் தொடர்கிறது. உணவு பாதுகாப்பு முதல் தற்போதைய பல மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களை மாற்றி வடிவமைத்து செயல்படுத்துவதன் வாயிலாக தற்போதைய பல வாழ்வுரிமை பிரச்சனைகளுக்கு தீர்வுகள் காணப்படும் முயற்சிகளை மேலும் முடக்கி தற்போதைய பொருளாதார சவால் களை புதிய வாய்ப்புகளாகக் கொண்டு மீட்பு நடவடிக்கைகள் என்ற போர்வையில் மேலும் பல கோடி விவசாயிகளின் நிலங்களை பயன்படுத்தி தங்களின் பொருளாதாரத்தை மென்மேலும் உயர்த்திக்கொள்ளவும் மாற்று வேளாண் மற்றும் பொருளாதார முயற்சிகள் என்ற பெயரில் இடது சாரி இயக்கங்களின் வேளாண் கோரிக்கைகளை, குரல்களை நெரிக்கும் முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது. ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்படுவது போல் நமது நாட்டின் ஏழை, எளிய மக்களின் தேவையை நிறைவு செய்கிறோம் என்கிற, "மனித நேயத்துடன் கூடிய பொருளா தார முயற்சிகள்" நிலச்சீர்திருத்தம் நடைமுறைப் படுத்தாத வரையில் சாத்தியம் இல்லை என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# கப்பல் அதிகாரி வேலை வேண்டாம்



தனியார் கப்பலொன்றில் பெரிய அதிகாரியாகப் பணியாற்றிவந்த சகோதரர் சிவராமனிடமிருந்து பாலசுப்பிரமணியத்திற்கு ஒரு கடிதம் வந்தது. மற்றொரு தனியார் கப்பலில் ஏ. பாலசுப்பிரமணியத்திற்கு ஒரு பெரிய வேலைக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும், உடனே அவர் சென்னைக்கு வந்து அந்த வேலையில் சேரவேண்டுமென்றும், சிவராமன் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். மாதம் பல ஆயிரம் ரூபாய் சம்பள முள்ள வேலை அது.

ஏ. பாலசுப்பிரமணியம் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு கட்சி அலுவலகத்திற்கு வந்தார். நகர கட்சி செயலாளர் சின்னச்சாமியும், இதர தோழர்களும் அங் கிருந்தனர். அவர்களிடம் தன் சகோதரர்களிடமிருந்து வந்த கடிதத்தை படித்துக்காட்டிய பாலசுப்பிரமணியம், தான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில் பதில் கூறினர்.

"தொழிலாளி வர்க்கத்திற்கு உங்கள் சேவை மிகவும் தேவை. உங்களுடைய சேவை என்றைக்கும் வீண்போகாது. பெரிய தலைவராகும் வாய்ப்பு உங்களுக்குண்டு. கப்பல் வேலை வேண்டாம்!"

தோழர்கள் கூரிய பதிலைக் கேட்ட பாலசுப்பிரமணியம், ஒரு வினாடி நேரம் கூட தாமதிக்கவில்லை. கடிதத்தைக் கிழித்து குப்பைக் கூடையில் போட்டார். அந்த வினாடியிலிருந்து தொழிலாளி வர்க்கத்திற்கு சேவை செய்வது, அதன் போராட்டங்களில் ஈடுபடுவது என்ற பணிக்கு தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்துக்கொண்டார். இந்த முடிவை நினைத்து அவர் தன் வாழ்க்கை முழுவதிலும் பெருமிதம் கொண்டிருந்தார். ஒருபொழுதும் பின்னோக்கிப் பார்த்ததில்லை.

பாலசுப்பிரமணியம் எடுத்த இந்த உறுதியான முடிவு, திண்டுக்கல் கட்சித் தலைவர் களுக்கு பெரும் மகிழ்ச்சியளித்தது. திண்டுக்கல் நகரில் வாயில்லாப்பூச்சிகளாக, கொத் தடிமைகளைப் போராட்டப் பாதையில் அழைத்துச் சென்று, உரிமை பெற்றவர்களாக அவர்களை ஆக்குவது என்ற வரலாற்றுக் கடமையைச் செய்யக்கூடிய திரன்படைத்த மனிதர் பாலசுப்பிரமணியம் என்றே அவர்கள் உறுதியாக நம்பினர். அந்த நம்பிக்கையைப் பாலசுப்பிரிமணியம் மெய்ப்பித்துக் காண்பித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

**நூல் விமர்சனம்:** **வே. மன்னார்**

# இன்று...இப்போது...என்ன செய்வது?

புதிய ஜீவா எழுதிய"இன்று...இப்போது... என்ன செய்வது"? என்ற நூல் ஒரு புதிய முயற்சி. ஒரு பெரிய தொழிற்சாலையில் பன்னிரெண்டு ஆண்டுகள் பணியாற்றிய காலத்தில் நெருக்கமாக இருந்து பார்த்த அனுபவ அடிப்படையில் தொழிற்சங்கத்தின் இன்றியமையாமையையும், அது சந்திக்கும் சவால்களைத்தீர்ப்பதற்கான அணுகுமுறைகளையும், முன்மொழிவுகளையும் ஆலோசனைகளாக முன்வைக்கிறார். நூலின் முன்பாதியில் சென்னை போன்ற பெருநகரங் களில் தொழிற்சங்கம் சந்திக்கும் பிரச்சனை களைப் பற்றி விவரிக்கிறார். பின்பாதியில் வேக மாக உலக மயம் அமலாகும் இன்றைய கால கட்டத்தில் தொழிற்சங்கம் எதிர்நோக்கும் புதிய வடிவங் களைப்பற்றி அலசுகிறார்.

ஒரு தொழிற்சங்கத்தின் தேவையை உணருகிற, தன்னைப்புதிதாக தொழிற்சங்கத்தில் இணைத் துக்கொள்கிற எவருக்கும் இந்த நூல் பெரிதும் பயனுள்ளதாக, கையேடாக விளங்கும். தொழிற் சங்கத்தின் பால பாடத்தை மிக எளிமையான வார்த்தைகளில் சலிப்பேற்படுத்தாமல் விவரித் துச்செல்வதில் இந்நூல் வெற்றி கண்டிருக்கிறது என்றே சொல்லலாம். தொழிற்சங்கத்தின் அவ சியம், தொழிலாளர் ஒற்றுமை,வர்க்க அரசியல் புரிதல், சரியான தொழிற்சங்கத் தலைமையை தேர்வு செய்தல் பற்றியெல்லாம் தன்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் வழிகாட்ட முயற்சியெடுத்திருப்பது பாராட்டுக்குரியது. ஒரு ஆலையில் தொழிலாளர்களும், தொழிற்சங்க மும் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளை எப்படி எதிர்கொள்வது நன்மை பயக்கும் என்ற இவரது ஆலோசனைகள் நூல் முழுவதும் விரவிக்கிடக் கின்றன. தோழமையோடு தொழிலாளியின் கரம் கோர்த்து தொழிற்சங்க உலகத்துக்குள் மெல்ல நுழைந்து, கொஞ்சங் கொஞ்சமாக அதன் பிரம்மாண்டங்களை காட்சிப்படுத்த அவர் எடுத்திருக்கும் முயற்சியில் அவருடைய பெரும் உழைப்பு அடங்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. எனினும் வரலாற்றுப்பின்புலமின்றி இருப்பது இந்நூலின் பலவீனம். இடதுசாரி தொழிற்சங்க முன்னணி ஊழியர்களைப் பொறுத்த அளவில் அவர்கள் அறிந்த செய்தி கள் மற்றும் அனுபவங்கள் பதிவாக இது உள்ளது. ஒன்றுபட போராடுவதும், போராட ஒன்றுபடுவதும் தொழிலாளி வர்க்கத்தின் பணி களில் அடிப்படையானது என்ற தொழிற்சங்க பிதாமகர் பி.டி.ரணதிவேயின் கருத்தை நூலின் சாரமாக பிழிந்து தந்திருக்கிறார்.

தாங்கள் ஒரு வர்க்கம் என்ற புரிதலைப் பெறு தலும், தங்களுக்கான வர்க்க அரசியல் போதத்தை பெறுவதின் தேவையையும் தொழிலாளர்க்கு எவ்வளவு அவசியம் என்பதை இந்நூலில் வலி யுறுத்தியிருப்பது இடதுசாரி சங்கங்களில் உள்ள முன்னணி ஊழியர்கள் அன்றாடம் செய்து வரும் பணியே. நிகழ்காலத்தில் நின்று கொண்டு இந்நூல் தொழிற்சங்க நிகழ்வுகளை அலசுகிறது. அதனதன் தொடர்பான வரலாற் றுப்பின்ன ணியை தொழிலாளியின் கவனத்திற்கு கொண்டு வராமல், என்னதான் ஏற்கும் விதத்தில் விளக்கி னாலும் தொழிலாளியின் புரிதல் அதன் முழு பரிமாணத்தை எட்ட இயலாது. தொழிலாளர் கள் நடத்திய போராட்டங்களின் பலத்திலேயே தொழிற்சங்க உரிமைகள், தொழிற்சங்க சட்டங் கள் கிடைத்தன என்று ஒரு வரியில் சொல்லிச் செல்வது அதனை மிக எளிமையாக தொழிலாளி புரிந்து கொள்ளும் தவற்றை ஏற்படுத்தும். தொழிற்சங்கத்தின் தோற்றமும் அதன் வளர்ச்சி யும் அவ்வளவு சுலபமாக நடந்துவிட வில்லை. அதன்பின்னே எவ்வளவு உயிரிழப்புக்கள், தியாகங்கள், சொல்லொணா சோகங்கள் அடங்கியுள்ளன. துரோகங்களையும், காட்டிக் கொடுத்தல்கள், தோல்விகள், ஏமாற்றங்கள் பலவற்றைச்சந்தித்தே தொழிற்சங்க இயக்கங்கள் வளர்ந்தன.

எனவே இவைகளை கொஞ்சங்கூட கோடிட்டு காட்டாமல் எவ்வளவுதான் வர்ணித் தாலும், அக்கருத்துக்கள் அதன் ஆழத்தையும் அகலத்தையும் அளிக்காது. இந்தியாவில் முத லாளித்துவம் உருப்பெற்று வளர்ந்த காலந் தொட்டே, தொழிலாளி வர்க்கமும் வளர்ந்து வந்தது. முதலாளி--தொழிலாளி முரண்பாடு சமரசங்களால் தீராது என்பதனை, தொழிற் சங்கம் என்ற ஒரு அமைப்பு இல்லாத காலங் களிலேயே நடைபெற்ற எண்ணற்ற போராட் டங்கள் உணர்த்தின. இந்தியாவில் 1918ல் அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்ட முதல் சங்கம் என்ற பெருமை பி அண்ட் சி மில்லில் பி.பி.வாடியாவால் ஏற்படுத்தப்பட்ட மெட்ராஸ்



படிப்பகம்

www.padippakam.com

லேபர் யூனியனையே சாரும். அதே ஆண்டில் குஜராத்தில் காந்தியடிகளால் தன் கண்ணோட்டத்திற்கேற்ப மஜூர் மஹாஜன் என்ற ஒரு அமைப்பை அகமதாபாத் பஞ்சாலை ஒன்றில் ஏற்படுத்தினார். முதலாளிகள் தர்மகர்த்தாக்களாக இருந்து தங்கள் சொத்தை நிர்வகிக்க வேண்டும். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டால் நடுவர் மத்யஸ்தம் மூலம் பிரச்சனையை தீர்க்கவண்டும் என்பதே அவர் நிலை. வர்க்க அரசியல் குறித்து அவருக்கு நம்பிக்கையுமில்லை, தொழிலாளர்க்கு அவசியமுமில்லை என்பதே அவரின் கருத்தாக இருந்தது. ஆனால் முதலாளிகள் தர்மகர்த்தாக்களாகவும் இல்லை, நடுவர் மன்றங்களால் பிரச்சனை தீர்ந்துவிடவுமில்லையென்பதே யதார்த்தம். காந்தி இன்றிருந்தால் தன் கருத்தை அவரே நிச்சயம் மாற்றிக் கொண்டிருப்பார். சோவியத் புரட்சியின் வீச்சும், பிரிட்டனில் தொழிற்சங்க செயல்பாட்டையும் கண்டு அதனால் கவரப்பட்ட சில தேசியத்தலைவர்கள் 1920ல் ஏ.ஐ.டி.யு.சி அமைப்பை உருவாக்கினர். தொழிலாளி வர்க்கம் பொருளாதார சுதந்திரம் பெற்றால் மட்டும் போதாது. அரசியல் சுதந்திர மும் பெற வேண்டுமென அவர்கள் அறைகூவல் விடுத்தனர். அவர்களைப்பொறுத்தவரை அர சியல் சுதந்திரம் என்பது பிரிட்டிஷாரை நாட்டை விட்டு வெளியற்றுவதோடு மட்டுமே நின்றது. தொழிலாளி வர்க்கம் தன்னை ஒரு வர்க்கமாக உணர்வதோடு, அனைத்துவித சுரண்டல்களில் இருந்தும் விடுபடவேண்டுமென்றால், நிலவும் அமைப்பை மாற்றுவதைத்தவிர வேறு வழியில்லையென்பதை சோவியத் யூனியனில் ஏற்பட்ட புரட்சியும், மார்க்சியமும் தெளிவாக போதித்தன. இதனை உள்வாங்கிய ஏராளமான நடுத்தர வர்க்க அறிவு ஜீவிகள், தொழிலாளர்கள் மத்தியில் ஏ.ஐ.டி.யு.சி தலைமையில் செயல்பட ஆரம்பித்தனர்.

நாடு முழுவதும் உள்ள சங்கங் கள் இதில் இணைந்த போது, காந்தி தொடங்கிய தொழிற்சங்கம் இதில் சேரவில்லையென்பது மட்டுமல்ல, பின்னால் காங்கிரஸ் கட்சி தனக்கென ஐ.என்.டி.யு.சி அமைப்பைத் தொடங் கவும் காரணமாக இருந்தது. ஒவ்வொரு கட்சியும் தனக்கென ஒரு தொழிற்சங்க அமைப்பைத் தொடங்கவும் இது வழி வகுத்தது. 1926ல் கொண்டுவரப்பட்ட தொழிற்சங்க சட்டம் சுலபமாக வந்துவிடவில்லை. 1924ல் ஏ.ஐ.டி.யு.சி கொடுக்கும் தகவல்படி பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களை உள்ளடக்கிய 187 தொழிற்சங்கங்கள் இருந்துள்ளன. இவர்கள் நடத்திய எண்ணற்ற போராட்டங்களின் விளைவே பிரிட்டிஷாரை அரைகுறையாகவாவது ஒரு தொழிற்சங்க சட்டத்தைக்கொண்டுவர நிர்ப்பந்தித்தது. இப்படித்தான் தொழிலாளர் தொடர்பாக கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு சட்டத்தின் பின்னே தொழிலாளி வர்க்கத்தின் அளப்பரிய தியாகம் இருந்தது. முத லாளித்துவ கட்சிகள் மற்றும் சாதிய அமைப்புக்கள் தங்களுக்கென ஒரு தொழிற்சங்க அமைப் பைத் தொடங்கி, அதைத் தங்கள் இயக்கத்தின் துணை அமைப்பாக வைத்திருப்பது மட்டுமல்ல தொழிலாளர்கள் ஒற்றுமையைக் குலைத்து பிளவினையும் ஏற்படுத்தியுள்ளது. முழு விடுதலை என்ற இலக்கை நோக்கி தொழிலாளர்களை சுயேச்சையாக அணிதிரட்டுவதில் ஈடுபட்டுள்ளவை இடதுசாரி தொழிற்சங்க இயக்கங்களே. இவைகளெல்லாம் நூலில் இடம் பெற்றிருந்தால் படிப்பவர்க்கு மேலும் தெளிவு கிடைத்திருக்கும். கடந்து போன 2011ம் ஆண்டு உலக அளவில் வீச்சான தொழிலாளர் போராட்டங்களும், சர்வாதிகாரத்திற்கெதிரான பொது மக்களின் போராட்டங்களும் போராட்ட ஆண்டாகவே இருந்தது.

கடந்த செப்டெம்பர் 17 அன்று தொடங்கிய வால் ஸ்டிரீட்டைக்கைப்பற்றும் போராட்டம், தற்போது 80க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட நகரங்களில் பரவி தீவிரமாக நடந்து வருகிறது. நாங்கள் 99சதம் என்ற முழக்கத்துடன் நடைபெறும் இந்த போராட்டம் ஒரு சதவீத பணக்காரர்களை எதிர்த்தே நடைபெறுகிறது. இதில் வியத்தகு உண்மை என்னவென்றால், இந்த போராட்டக்காரர்கள் தங்களின் வாழ்வாதாரங்கள் பறிக்கப்பட்டதற்கு அரசின் முதலாளித்துவ ஆதரவு கொள்கையே காரணம் என்பதையும், முதலாளிகளை ஆதரிக்கும் சமூக அமைப்பு மாற வேண்டுமென்று கோருவதும்தான். முன்பு போர்டு முதலாளிக்கு எது நல்லதோ அது அமெரிக்காவுக்கு நல்லது என்று கூறப்பட்டது. இப்போது வால்ஸ்டிரீட்டுக்கு எது நல்லதோ அது அமெரிக்காவுக்கு நல்லது என்று கூறப்படுகிறது அமெரிக்காவின் இந்த கொள்கை தங்களை எங்கு கொண்டுபோய் விட்டுள்ளது என்பதை தெளிவாக அறிந்தே இந்த போராட்டம் நடைபெறுகிறது என்பதே இதன் தனித்தன்மையாகும். இன்று நாடுகள் மத்தியிலேயும் சரி, மக்கள் மத்தியிலேயும் சரி ஏற்றத்தாழ்வுகள் நிலவுவதற்கு காரணம் முதலாளித்துவம் என்பதை உணர்ந்த பின்தான் அதற்கான மாற்றை மார்க்ஸ் எழுதிய மூலதனத்தில் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சிய லெனினியத்தைப் பயி லவும் அதை அறியவும் லட்சக்கணக்கான இளை ஞர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே முதலாளித்துவத்திற்கு மாற்று மார்க்சிய லெனினியமே என்று தைரியமாக உரத்து முழங்க லாம். மார்க்சியம், முதலாளித்துவ பொருளா தார வல்லுநர்கள் கூறுவது போல காலாவதி யானது என்ற வாதம்தான் காலாவதியானது. இதைச் சொல்ல இனியும் தயங்கவேண்டிய தில்லை என்பதை நூலாசிரியர் உணர்வார் என நம்பு கிறோம். தொழிற்சங்கம் குறித்து மார்க்சும், லெனினும் கூறிய வார்த்தைகள் எவ்வளவு பொருத்தப்பாட்டை இன்றுங்கொண்டிருப்பது ஒன்றே அவர்களின் தீர்க்க தரிசனத்தை உணர்த் தும். "தொழிற்சங்கங்களின் உடனடி நோக்கம் என்ன? முதலாளித்துவத்தை எதிர்த்து அன்றாட போராட்டம் நடத்துவது,கூலியிலும், வேலை நேரத்திலும்,முதலாளித்துவம் செய்யும் தினசரி தில்லுமுல்லுகளை எதிர்த்து பாதுகாப்பு போர் நடத்துவது. தொழிற்சங்கங்களின் இந்த நட வடிக்கை நியாயமானது மாத்திரம் என்பது மட்டுமல்ல;அது அவசியமானதுங்கூட.தற்கால உற்பத்தி முறை நீடிக்கும் வரையில், இதைப் புறக்கணிக்க முடியாது. அதற்குமாறாக இது எங்கும் பரவ வேண்டும்.

சகல தேசங்களிலும் தொழிற்சங்கங்களை உருவாக்கி ஒன்றுபடுத்தி, இந்த அன்றாட போராட்டத்தை உலகெங்கும் நடத்த வேண்டும்." "முதலுக்கும் தொழிலுக்ககும் நடக்கும் கொரில்லா போராட்டத்துக்கு தொழிற் சங்கங் கள் அத்தியாவசியமானால், கூலிக்கு உழைப்பை விற்கும் அமைப்பையே ஒழிப்பதற்கு தொழிற்சங்க ஸ்தாபனங்கள் அதிமுக்கியமா கின்றன."(1866ல் ஜெனீவாவில் நடைபெற்ற முதல் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன மாநாட்டில் மார்க்ஸ்) "தொழிலாளி வர்க்கமானது தனது சொந்த முயற்சியின் மூலமாகவே தொழிற்சங்க உணர்வை மட்டுமே, அதாவது சங்கங்களில் இணைந்து கொள்வது அவசியம் என்ற கருத் தோட்டத் தைப்பெறுவது, முதலாளிகளை எதிர்த்துப் போராட வேண்டும்,தேவையான சட்டங்களை நிறைவேற்ற அரசை வற்புறுத்து வதற்கு முன் முயற்சி எடுக்கவேண்டும் என்பது போன்ற, கருத்துக்களை மட்டுமே உருவாக்கிக் கொள்ளும் திறன் படைத்ததாக இருக்கிறது என்பதை அனைத்து நாடுகளின் வரலாறும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. எனினும் சோஷலிஸத் திற்கான தத்துவம் என்பது சொத்துரிமை பெற்ற வர்க்கங்களின் கல்வியறிவு பெற்ற பிரதி நிதிக ளால், அறிவுஜீவிகளால் விளக்கிக்கூறப்படும் தத்துவார்த்த, வரலாற்று மற்றும் பொருளா தாரக் கொள்கைகளிலிருந்துதான் வளர்ந் தெழுகிறது. அவர்களது சமூக அந்தஸ்தின்படி நோக்கினால்,நவீன விஞ்ஞான சோஷலிஸத்தின் நிறுவனர்களான மார்க்ஸ், ஏங்கெல்ஸ் ஆகிய இருவருமே முதலாளித்துவ அறிவுஜீவிகள் பிரிவைச்சேர்ந்தவர்கள்தான" -லெனின். இத் தகைய விவரங்களையும் நூல் உள்ளடக்கியிருக்கு மானால், மேலும் அழுத்தமும், பொலிவும் பெற்றிருக்கும்.

*நூல் கிடைக்குமிடம்:*

**பாவை பப்ளிகேஷன்ஸ்,**
ராயப்பேட்டை, சென்னை.
விலை: ரூ. 150-


**Registration of Newspaper (Central) Rules 1957**

**FORM IV**
**(See Rule 8)**

Statement about ownership and other particulars about Marxist Monthly

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | 6/16. By-pass Road, Madurai - 625 018. |
| 2. Periodicity of Publication | : | Monthly |
| 3. Printer's Name | : | N. Varadarajan |
| Nationality | : | Indian |
| Address | : | 27, Vaidyaram Street, T. Nagar, Chennai - 17. |
| 4. Publisher's Name | : | N. Varadarajan |
| Nationality | : | Indian |
| Address | : | 27, Vaidyaram Street, T. Nagar, Chennai - 17. |
| 5. Editor's Name | : | V. MeenakshiSundaram |
| Nationality | : | Indian |
| Address | : | 27, Vaidyaram Street, T. Nagar, Chennai - 17. |

6. Name and address of individuals who own the newspaper and partners of shareholders holding more than one percent of the total capital:
Owned by Communist Party of India (Marxist) 27, Vaidyaram Street, T. Nagar, Chennai - 17.

I, N. Varadarajan hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

March 2012

**N. VARADARAJAN**
Publisher




படிப்பகம்


www.padippakam.com

# தோளில் சுமக்க வேண்டிய நாவல்கள்

□ சு.பொ. அகத்தியலிங்கம் □

**ப**த்து மாதம் சுமந்து பெற்ற வலியும்-பேறு காலத்தில் பட்டவலியும்-உதிரத்தைக் கொடுத்து வளர்த்த வலியும் பிள்ளைகள் மீது தாய் வெறித் தனமாக பாசம் கொள்ளச் செய்கிறது. இந்த வலி களை தன் வலியாக உணர்ந்த தந்தையின் பாச மும் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல. பிரசவ வலியைவிட கொடுமையான வலி வேறு எதுவும் இல்லை என்கின்றனர் மருத்துவ வல்லுநர்கள். இப்போதெல்லாம் குழந்தை பிரசவத்தின்போது கணவர் அருகிலிருந்து பார்க்கச்செய்கின்றனர். ஐரோப்பிய நாடுகளில் இது வழக்கமாகி விட்டது. நமது நாட்டிலும் இந்த வழக்கம் மெல்ல பயிற்றுவிக்கப்படுகின்றது. பெற்றவளுக்குத்தானே தெரியும் பிள்ளை அருமை என்பதை மாற்றி பெற்றோர்களுக்குத்தான் தெரியும் பிள்ளை அருமை என உணர்த்த சமூகம் பெருமுயற்சி எடுக்கிறது.

பிள்ளைகளுக்கு மட்டுமல்ல ஒரு நிறு வனத்தை - இயக்கத்தை-விடுதலையை - உரிமை களை பெற்றிட; சிந்திய வியர்வையை, ரத் தத்தை,பட்டபாட்டினை அறியாத-உள்வாங்காத தலைமுறையால் அதனை பாதுகாக்க இய லுமா?வரலாற்றை கற்கவேண்டிய தேவை ஒரு



புறம். அதன் உயிர்த்துடிப்பை உள்வாங்க வேண் டிய தேவை மறுபுறம்.முன்னதை வரலாற்று நூல் கள் அளிக்கும்.பின்னதை நாவல்,சிறுகதைகள் போன்ற படைப்பிலக்கியங்கள் அளிக்கும். கம்யூனிஸ்ட் இயக்கத் தியாகத் தலைமுறையின் கடைசிச் சுவடும் காலநகர்வில் கரைந்து கொண் டிருக்கிறது.பொல்லாத உலகமயம் நம்மை சுழற்றி அடித்துக் கொண்டிருக்கிறது.இனி முன்நகர் தலுக்கான உயிர்ச்சூட்டை நேற்றைய தலைமுறை யிடமிருந்து நாம் பருகியாக வேண்டும்.ஆம்.நமது வரலாற்றை படிக்கவேண்டும் நமது தியாகச் செங்குருதியை சுவாசிக்கவேண்டும்.


முதலாவதாக நமது வரலாறு முழுமையாக எழுதப்பட்டுவிட்டதா? அகில இந்திய அளவில் இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு 1920-33 ஆண்டு வரை முதல் பாகமாக தொகுக்கப்பட் டுள்ளது. தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள் ளது. இதுபோக அருணன் எழுதிய இந்திய கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றில் தமிழக வர லாறும் பிணைந்துள்ளது. அகில இந்திய மாநில தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளில் பல செய்திகள் கிடைக்கின்றன. என். ராமகிருஷ்ணன் எழுதிய தமிழக கம்யூனிஸ்ட் இயக்க வரலாறு 1964 வரையிலுமான வரலாற்றைக் குறித்து நம்பகமான முதல் தகவல் அறிக்கையாக நம்முன் உள்ளது.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு என்பது தியாகிகளின் வரலாறா? சம்பவங்களின் தொகுப்பா? தத்துவ மோதல்களின் சித்தரிப்பா? உள்கட்சி சண்டைகளின் விவரிப்பா? அன்றைய கால அரசியல் - பொருளாதார - சமூகப் பின் னணியோடு கட்சி மேற்கொண்ட முயற்சிகளின் தொகுப்பா? இப்படி பல கேள்விகள் எழும். ஒரு புத்தகத்தில் இவை அனைத்தும் கிடைத்தால் மகிழ்ச்சி. இல்லை என்றால் பல புத்தகங்கள் தேவைப்படும். ஏனெனில் வரலாற்றை ஒற்றைக் கோணத்தில் மட்டும் புரிந்து கொள்ள இயலாது - புரிந்து கொள்ளவும் கூடாது. என். ராம கிருஷ்ணனின் வரலாற்றுப் பதிவும் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளும் இதற்கான ஆரம்ப ஆதாரங்களை திரட்டித் தந்திருக்கிறது. ஒரு தனி மனிதரின் முயற்சி என்ற வகையில் இதனை இருகை தட்டி வரவேற்போம். போற்றுவோம். அதே சமயம் தமிழக கம்யூனிஸ்ட் இயக்க வர லாற்றை எல்லாக் கோணங்களிலும் புரிந்து கொள்ள ஏதுவாக புதிதாக எழுத வேண்டும். அது பல பாகங்களாக பல ஆயிரம் பக்கங்களாக வரக்கூடும். இதை ஒரு தனி மனிதர் செய்ய



படிப்பகம்

www.padippakam.com



இயலாது. ஒரு குழுவாக முயற்சித்தால் முடியாதது இல்லை. அவசியம் செய்தாக வேண்டும். அடுத்த தலைமுறைக்கு - கடந்த தலைமுறையின் தியாகத்தை உழைப்பை சரியாக உணர்த்தாமல் அடுத்த கட்ட பயணம் சாத்தியமில்லை அல்லவா?

இதுஒரு புறம் இருக்கட்டும். வரலாற்றின் உள்துடிப்பை தியாகத்தின் உயிர்மூச்சை படிக்கிற வாசகன் குருதியில் கலந்து நாடி நரம்புகளை முறுக்கேறச் செய்கிற வல்லமை படைப்பிலக்கியங்களுக்கு உண்டு. மாக்ஸிம் கார்க்கியின் தாய் நாவல் புரட்சியின் உந்துவிசை என்றால் மிகையல்ல. நான் இந்த நாவலை முதன்முதலில் நான் வாசித்த அனுபவம் இன்றும் என்னுள் பசுமையாக இருக்கிறது.

ஒருநாள் காலை வேலைக்குச் செல்வதற்காக சோற்றுமூட்டையுடன் குரோம்பேட்டையில் மின்சார ரயிலில் ஏறினேன். நாவலைப் படிக்கத் துவங்கினேன். என்னை மறந்தேன். அந்த ரயில் எத்தனை முறை கடற்கரைக்கும் தாம்பரத்திற்கும் சென்று வந்தது என்று கூட எனக்குத் தெரியாது. பசித்தபோது சாப்பிட்டேன். வேலைக்கு போகவில்லை. படித்து முடித்துவிட்டு இரவுதான் ரயிலை விட்டு இறங்கினேன். இந்த நாவலின் கதாநாயகன் பாவேல் என்னைப் புரட்டிப்போட்டு விட்டான். எத்தனை பேரை இவன் இப்படி வேதியியல் மாற்றம் செய்தானோ? நான் அறியேன்.

அதுபோல் கையூர் தியாகிகளின் வீரவரலாற்றைப் பேசும் நினைவுகள் அழிவதில்லை (மொழிபெயர்ப்பு - பி.ஆர். பரமேஸ்வரன்) என் நெஞ்சை விட்டு இன்றளவும் நீங்கவில்லை. 1946ல் நடந்த கப்பற்படை எழுச்சியின் பின்புலத்தில் யஸ்பால் எழுதிய காம்ரேட் நாவலின் கீதாவை யார்தான் மறக்க இயலும்? இப்படி பல நாவல்கள் கடந்த காலங்களில் கம்யூனிஸ்ட் உணர்வை ஊட்டுவதில் ஆற்றிய பங்கை அசைபோட்டு பார்க்க வேண்டும். மேலே குறிப்பிட்ட நாவல்கள் மொழிபெயர்ப்பாக வந்தவை.

தமிழில் சுயமாக எழுதப்பட்ட இத்தகைய நாவல்களை சற்று நினைவுத்திரையில் ஓடவிட்டு பார்க்கிறேன். பெரிய பட்டியல் இருக்கிறது. ஒன்று இரண்டை தொட்டுச் சொல்ல வேண்டியிருக்கிறது. பஞ்சாலைப் போராட்ட வாழ்வைப் படம்பிடித்த தொ.மு.சி. ரகுநாதனின் பஞ்சும் பசியும்; தேயிலைத் தோட்டத்தில் அட்டைக் கடிகளுக்கு மத்தியில் வதைப்பட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை அவலத்தையும் - கொடுமையை எதிர்த்து அந்த ஒடுக்கப்பட்ட மக்கள் சங்கம் சேர்ந்த வரலாற்றையும் ரத்தமும் சதையுமாய் பேசும் டி. செல்வராஜின் தேநீர்; மலைமக்களின் வாழ்க்கையை எழுச்சியை உயிர்க்காவியமாய் ஆக்கியிருக்கும் கு. சின்னப்ப பாரதியின் சங்கம்; சின்னியம்பாளையம் தியாகிகளின் வீரக்கதையை சொல்லும் ராஜாமணியின் சங்கமம் ; இந்த வரிசையில் தொண்டு நிறுவனங்களோடு செயல்பட கற்றுக்கொடுக்கும் தனுஷ்கோடியின் தோழன் இப்படி ஒவ்வொன்றும் நம் இதயத்தில் நுழைந்து மூளையைக் குடைந்து ரத்த நாளங்களை சூடேற்றும்.

இந்த வரிசையில் கு. சின்னப்ப பாரதியின் தாகம், சர்க்கரை, டி. செல்வராஜின் மலரும் சருகும், ச. தமிழ்செல்வனின் ஜிந்தாபாத் உட்பட பல உண்டு. மறைந்த மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் கே. முத்தையா எழுதிய விளைநிலம், உலைக்களம். போன்ற நாவல்கள் வெறும் கதையல்ல. கம்யூனிஸ்ட் இயக்கம் தமிழகத்தில் வேர் கொண்ட போது சந்தித்த அடக்குமுறைகளை போராட்டங்களை ஜீவத்துடிப்போடு நம்மிடம் பேசும். சுபாஷ் சந்திர போஸ் எழுதிய சாம்பவான் ஓடை மற்றும், சிவராமன் போன்ற நாவல்களும் இதே பணியைச் செய்கின்றன. (நினைவிலிருந்து எழுதியதால் பல நூல்களின் பெயர்கள் விடுபட்டிருக்கக்கூடும். அதையும் இக்கட்டுரை வாசிப்போர் சேர்த்துக் கொள்ளலாம்)

கடைசியாக வெளிவந்த டி. செல்வராஜின் தோல் நாவல், ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் அவசியம் படிக்க வேண்டிய தோளில் சுமக்க வேண்டிய நாவல். திண்டுக்கல்லில் தோல் பதனிடும் தொழிலாளிகளை அணிதிரட்டிய வரலாற்றை - அதன் கதாநாயகனாய் களத்தில் நின்ற எ. பாலசுப்பிரமணியம், மதனகோபால், எஸ்.கே. தங்கராஜ் உட்பட தலைவர்களின் வாழ்க்கையை - தியாகத்தை, தீரத்தை, ஒடுக்கப்பட்ட மக்களின் அர்ப்பணிப்பு மிக்க போர்க்குணத்தை இந்த நாவல் நம் இதயத்தில் ரத்தத்தால் எழுதுகிறது. நீண்ட காலத்திற்கு பிறகு நான் என்னை மறந்து படித்த நாவல் இது.

இவை மட்டுமல்ல. டால்ஸ்டாய் எழுதிய அன்னா கரீனா மற்றும் போரும் வாழ்வும், வாண்ட வசலிவஸ்கா எழுதிய வானவில்,குவான் தின் கோ எழுதிய உன் அடிச்சுவட்டில் நானும், அலெக்ஸ் ஹெலே எழுதிய ஏழு தலைமுறைகள், சி.ஆர். ரவீந்திரன் எழுதிய பிணம் தின்னிகள்,



படிப்பகம்

www.padippakam.com

**கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு என்பது தியாகிகளின் வரலாறா? சம்பவங்களின் தொகுப்பா? தத்துவ மோதல்களின் சித்தரிப்பா? உள்கட்சி சண்டைகளின் விவரிப்பா? அன்றைய கால அரசியல் - பொருளாதார - சமூகப் பின்னணியோடு கட்சி மேற்கொண்ட முயற்சிகளின் தொகுப்பா? இப்படி பல கேள்விகள் எழும். ஒரு புத்தகத்தில் இவை அனைத்தும் கிடைத்தால் மகிழ்ச்சி. இல்லை என்றால் பல புத்தகங்கள் தேவைப்படும். ஏனெனில் வரலாற்றை ஒற்றைக் கோணத்தில் மட்டும் புரிந்து கொள்ள இயலாது - புரிந்து கொள்ளவும் கூடாது.**

மைக்கேல் ஷோலோகோ எழுதிய டான் நதி அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது, ஒஸ்திர வொஸ்கி எழுதிய வீரம் விளைந்தது, சூ.ஈ-போ எழுதிய சூறாவளி இப்படி பிற மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்த நாவல்கள் தமிழர்களின் நாவல் ரசனையையே பல மடங்கு உயர்த்திய நாவல்கள். இவற்றையெல்லாம் படித்தவர்கள் மரணத்தின் வாயில் போகும்போதும் செங்கொடியின் மதிப்பைப் போற்றுவார்கள்.

கம்யூனிச எதிர்ப்பு விஷம் கக்கும் ரா.சு. நல்ல பெருமாளின்போராட்டங்கள், பாலகுமாரனின் மெர்க்குரி பூக்கள், கண்ணதாசனின் ரத்த புஷ்பங்கள் போன்ற பல நாவல்களும் ஜார்ஜ் ஆர்வெல் எழுதிய விலங்கு பண்ணை, பாஸ்டர் நாக் எழுதிய டாக்டர் ஷிவாகோ, ஷோல் ஷெனிட்சன் எழுதிய ஒரு நாவல் உட்பட பல கம்யூனிச எதிர்ப்பு வைரஸை தொடர்ந்து பரப்பிக்கொண்டே இருக்கின்றன. சமீபத்தில் தமிழ்நாட்டில் ஜெயமோகன் இந்த திருப்பணியில் முன்நிற்கிறார். பல கம்யூனிச எதிர்ப்பு நாவல்களின் விஷத்தொகுப்பாக அவர் எழுதிய பின் தொடரும் நிழலின் குரல்கள் ஊடகங்களால் பெரிதுபடுத்தப்படுகின்றன. நமது வர்க்க எதிரிகள் கம்யூனிஸ்டுகளை அவதூறு செய்யவும், கொச்சைப்படுத்தவும், வெறுப்பை விதைக்கவும் படைப்பிலக்கிய ஆயுதத்தைக் கையில் எடுத்துள்ள போது நாம் சும்மாயிருக்கலாமா? நாம் நிராயுத பாணிகள் அல்ல தான்! ஆனாலும் வார்த்த ஆயுதங்கள் போதுமா? போதாது. மேலும் மேலும் புதிது புதிதாய் வார்க்க வேண்டும்.

யாங்மோ எழுதிய இளமையின் கீதம் என்ற நாவலை மயிலை பாலு மொழிபெயர்த்திருந்தார். அதன் வெளியீட்டு விழாவில் பேசிய மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் என். சங்கரய்யா சீன மாணவர் இயக்க வரலாற்றை உயிரோடு இந்த நாவலில் நாம் காண்கிறோம். நம் விடுதலைப் போராட்டத்தில் வீறுகொண்டெழுந்த மாணவர் இயக்க வரலாற்றை இதுபோல் யாரும் எழுதவில்லையே என்று வேதனைப்பட்டதோடு முற்போக்கு எழுத்தாளர்கள் இதனை முன் மாதிரியாகக் கொண்டு இதுபோல் வரலாற்று நாவல்கள் படைக்க முன்வரவேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். அது சரியானது. அனுபவம் என்ன? வெண்மணியின் வீரஞ் செறிந்த வரலாற்றை கொச்சைப் படுத்தி இந்திரா பார்த்தசாரதி எழுதிய நாவல் குருதிப்புனல் வெளிவந்து பல வருடங்களுக்கு பிறகு சோலை சுந்தரபெருமாளின் செந்நெல் வெளிவந்தது. இது மட்டும் போதுமா? வெண்மணியின் நெருப்பில் இருந்து கங்கெடுத்து நூறு நாவல்கள் பூத்திருக்க வேண்டாமா? பொன்மலை தியாகிகளின் தன்னலமற்ற தியாகம் நாவலாய் மலர்ந்திருக்க வேண்டாமா? வாச்சாத்தி கொடூரமும் நியாயத் துக்காக நடந்த போராட்டமும் அதன் வெற்றியும் அற்புதமான நாவல் களமல்லவா? இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின்போது துணிச்சலாய் எல்லையோரத்தில் ரயிலை இயக்கி பெருந் தொண்டாற்றிய தமிழக ரயில்வே தொழிலாளர்கள் நினைவலைகள் பல நாவல்களின் உலைக்களம் அல்லவா? ஏன் மிகச் சமீபத்தில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கிய தியாகி லீலாவதி இன்னும் தமிழ் நாவலின் கதாநாயகி யாகவில்லையே? அவரை மையமாக வைத்து ஒரு ஹிந்தி திரைப்படம்கூட தயாராகிவிட்டது. லீலாவதியும், தூக்குமேடை பாலுவும், களப்பால் குப்புவும் இன்னபிற தியாகிகளும் நமது இலக்கிய நாயகர்களாய் உலா வருவது எப்போது?

நாம் சுமக்க வேண்டிய நாவல்கள் மேலே சுட்டியதுபோல் நிறைய உண்டு. நாம் சமைக்க வேண்டிய நாவல்களும் நிறைய உண்டு. படைப்பாளிகளுக்கு உத்தரவு போட்டு நாவலை உருவாக்க முடியாதுதான். இதயத்தில் ஊறி எண்ணத்தில் நிறைந்து எழுத்தில் வரவேண்டியவையன்றோ படைப்புகள்! ஆம்! அதே நேரத்தில் படைப்பாளிகளே எங்கள் தியாகிகளின் உதிரத்தை சுமந்து வரும் நாவல்கள் எங்களுக்கு நீங்கள் தரும் ஆயுதங்கள் என்பதை மறவாதீர்கள். சமூக மாற்றத்திற்காக நாவல்களையும் ஆயுத மாக்குங்கள். சுமக்க வேண்டியதை சுமக்கவும் சமைக்க வேண்டியதை சமைக்கவும் இதுதான் உரிய நேரம். இப்போதும் தவறவிட்டுவிட்டால் வரலாற்றில் நாம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுவோம்.

*மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்*
*20வது மாநில மாநாட்டையொட்டி*
*தீக்கதிர் வெளியிட்ட மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரை*



படிப்பகம்